"குடி அரசு" பதிப்பக வெளியீடு 9.

# புராண ஆபாசங்கள்

(அல்லது)

## மாறுவேடம் பூண்டு புராண ஆபாசத்தை வெளியாக்கும் இரு இளைஞர்கள்.

இரண்டாம் பதிப்பு 1000.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY

**"தரும பரீட்சை"**

என்னும் பண்டைய ஓலைச் சுவடியிற் கண்டது.

"குடி அரசு" பதிப்பகம், ஈரோடு.
1930

விலை அணா 3.

உண்மை விளக்கம் பிரஸ்,
ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடு 9.

# புராண ஆபாசங்கள்

(அல்லது)

## மாறுவேடம் பூண்டு புராண ஆபாசத்தை வெளியாக்கும் இரு இளைஞர்கள்.

தருமபரீட்சை என்னும்
பண்டைய ஓலைச்சுவடியிற்கண்டது.

## முதல் நாள்.

மனோவேகன், வாயுவேகன் என்னும் இரண்டு இளைஞர்கள் இந்துமத புராணங்களிலுள்ள ஆபாசப் புரட்டுகளை வெளியாக்கி பொது ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அஞ்ஞானத்தையும் பயத்தையும் பணச்செலவையும் நீக்கி மெய்ஞ்ஞான மார்க்கத்தில் திருப்பவேண்டி மாறுவேடம் பூண்டு புல்சுமையை ஒருவனும் விறகுச் சுமையை ஒருவனும் சுமந்துகொண்டு தங்களுக்குறிய இயற்கை சௌந்தர்யாலங்காரத்துடன் பாடலீபுரம் பிரம்மாலயத்தின் கிழக்கு வாசற்படி வழியாய்ச் சென்று அவ்விடத்தில் கட்டப்பட்டிருக்கும் பேரிகையை அடித்துச் சிம்மாதனத்தில் வீற்றிருந்தார்கள். பேரிகை சப்தங் கேட்டு வேதபாராயணரும் சாஸ்திர விர்ப்பனர்களுமாகிய விப்பிரஜனங்களும் பொது ஜனங்களும் ஓடி வந்து இவர்களுடைய ரூபலாவண்யத்தையும் சௌந்தரியத்தையுங்

கண்டு இவர்கள் காரண புருஷர்களோ என்னமோ வென்று ஆச்சர்யமுற்று, விப்பிரர்கள், "நீங்கள் யார்? எச்சாத்திரத்தில் சமர்த்தர்? வாதம்பண்ண வல்லவரோ" என்று கேட்டனர். உடனே மனோவேகன் எழுந்து "நாங்கள் தேசங்கள் பார்க்க யாத்திரையாக வந்தவர்கள்; எங்களுக்குச் சாத்திரமோ வாதமோ ஒன்றுந்தெரியாது" என்றனர். அது கேட்ட விப்பிரர்கள் கோபமாய் "நீங்கள் பிழை செய்து விட்டீர்கள்; சாத்திர விற்பன்னரும் எங்களுடன் வாதம் பண்ண வல்லவரும் மாத்திரமே இப்பேரிகையடித்து இச்சிம்மாதனத்திலமரவேண்டும். யௌவனமும், அழகும் பலமும் நிறைந்திருந்தும் நீங்கள் இந்த நீசாசாரத்திலிருந்து கொண்டிருப்பது மன்றி அஞ்ஞானத்தாராகிய நீங்கள் இந்த பேரிகையைக் கொட்டலாமா? புல்லும் விறகும் சுமக்கும் நீசர்களே! இதற்குத்தக்க பதில் கூறிவிட்டு வெளியேறுங்கள்" என்றனர்.

உடனே மனோவேகன் எழுந்து "ஐயன்மீர் நாங்கள் உங்களது கற்பனைப்படியே உங்களுடன் வாதித்தே வெளியேறுகின்றோம்; எல்லாரும் அமருங்கள்" என்று கூறி, "ஐயா விப்பிரர்களே! எங்களைப்போன்ற உருவும் சாமர்த்தியமும் உள்ளவர்கள் நீசாசாரத்தில் வாழ்ந்தவர் உங்கள் மதப் புராணத்தில்யாருமில்லையா? கூறுங்கள்" என்றனன். அதற்கு விப்பிரர்கள் "யாருமில்லை; யாருமில்லை" என்று உரத்துக்கூவினர். மனோவேகன் மகிழ்வுடன், "விப்பிரர்களே! ஸ்ரீமகாலட்சுமிக்கு நாயகனும் புவன பாலகனும் கௌஸ்துபாபரணனுமான மகாவிஷ்ணு கோகக்ஷனுக்குப் புத்திரனாகி அடிமையாகி அர்சுனனுக்குச் சாரதியாகியும் தூதனாகியும் இன்னும் கணக்கில்லாத ஈனத் தொழில்களையும் புரிந்திருக்கின்றானே! அது நீசாசாரமல்லவா? இன்னும் கேளும்; நித்யனென்றும், தேவாதிதேவனென்றும், ஜனன மரண வர்ஜிதனென்றும்,

ஞானசொரூபனென்றும் புகழ்ந்ததற்கு மாறாக பன்றியாகவும் மச்சமாகவும் பலதரம் பிறந்திருக்கின்றானே! ஞான சொரூபன் என்றதற்கு மாறாக தூதனாக துரியோதனனிடத்தில் போகும் போது வைவான் என்பதை யறியாமல் வாய் கொடுத்து விட்டு அவமானப்பேச்சுகள் கேட்டுக்கொண்டு வந்தானே. இவைகள் நீசாசார மல்லவா? இவைகள் உங்கள் புராணத்தில் உண்டா; இல்லையா?" எங்களை நீசாசாரமுடைய அஞ்ஞானி யென்றீர்களே இதற்கு விடை கூறுங்கள்' என்று தைரியமாய்க் கேட்டான். விப்பிர ஜனங்கள் மறுத்துக்கூற முடியாமல் வெட்கித் தலை குனிந்தார்கள். ஜனங்கள் ஆச்சரிய முற்று இரு இளைஞர்களையும் போற்றிப் புகழ்ந்து அவர்களுக்கு ஜெயவாதிகளென்ற பட்டத்தை அளித்து விட்டு வீடுபோய்ச் சேர்ந்தார்கள். இளைஞர்கள் இருவரும் சந்தோஷ முகத்துடன் வெளி வந்து விட்டார்கள். விப்பிரர்கள் "இவர்கள் யாரோ நம்பிழைப்பைக் கெடுக்க வந்த பேர் வழிகள் இவ்வாறு நம் புராணங்களை இகழ்ந்து அதிலுள்ள ஆபாசங்களை வெளியாக்கி விட்டால் நம்மை மதித்து இனி யார் வரப்போகிறார்கள்" என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு வருத்தத்துடன் வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

---

## இரண்டாம் நாள்.

---

மறுநாள் மனோவேகன், வாயுவேகனிருவரும் கையில் வில்லுந் தடியும் தாங்கி வில்லியர் போன்ற வேடத்துடன் பிரம்மாலயத்தின் வடகோபுர வழியாக உள்ளே சென்று பேரிகை யடித்துச் சிம்மாதன மேறினார்கள். பழைய படியும் விப்பிரர்களும் ஜனங்களும் ஏராளமாய் வந்து கூடிவிட்டார்

கள். உடனே விப்பிரர்கள் முதல்நாள் கேட்டபடி வாதத் தக்கழைக்க இருவரும் தாங்கள் வாதம் பண்ணத் தெரியாத வர்களென்று மறுத்தார்கள். "அப்படியானால் நீங்கள் இவ்வாறு பேரிகைகொட்டியும் சஹுசில் உட்கார்ந்திருக்கவும் கூடாது, என்று கண்டித்து விட்டு "நீங்கள் யார்; இங்கு வந்த காரணமென்ன" என்று வினவினர். அதற்கு மறுமொழியாக "நாங்களிருவரும் காட்டில் வாழும் வில்லியர். இந்த வில்லையும் தடியையும் விற்பதற்கு இந்நகர் வந்தோம்" என்றனர். அங்குள்ளவர்களில் சிலர் அதன் கிரயத்தைக் கேட்டனர். "இவ்விரண்டும் ஒரு குட்டி சுண்டெலியின் எலும்பால் செய்யப்பட்டது. இவ்வில்லில் அம்பைத் தொடுத்து விட்டால் நூறு யோசனை தூரமானாலும் போய்ச் சத்துருவைக் கொல்லும். இத்தடியால் எத்தகைய பெரிய பர்வதங்களையும் மெதுவாக அடித்தால் தூள் தூளாய் நொறுக்கி விடும். இவைகளின் விலை பன்னீராயிரம் வராகன். வரும் வழியில் எங்கள் கையிலுள்ள உணவுப் பொருள்களையும் சொத்துக்களையும் கள்ளர் எமாற்றிப் பறித்துக் கொண்ட படியால் இவைகளை விற்று விட வந்தோம்" என்றனர். எல்லா விப்பிரர்களும் ஜனங்களும் பெரு நகைப்பு நகைத்து இத்தகைய அபத்தம் சொல்லுவாருலகில் உங்களைப்போல் யாருமிரார் என்று ஏசினார்கள். உடனே மனோவேகன் விப்பிரர்களைப்பார்த்து "ஓ விப்ர சிகாமணிகளே உங்கள் மத புராணத்தில் இத்தகைய அபத்தக் கதையில்லையோ?" என்று கேட்டான். "எங்கள் புராணத்தில் நம்பத்தகாத இத்தகைய பொருத்தமற்ற பொய்க் கதைகள் கிடையவே கிடையாது, இருப்பின் ஒன்று கூறுங்கள் பார்க்கலாம்" என்றனர். உடனே மனோவேகன் தைரியமாய் நின்று "உங்கள் புராணத்திலுள்ள சதபலி சரித்திரம் என்பதைப்பற்றிச் சொல்லுகின்றேன் கேளுங்கள்" என்று நமஸ்கரித்துச் சொல்லுகிறான்:—

"சதபலி என்கின்ற ஓர் அசுர மகிபதி தன்னுடைய ஆதீனத்தை குமாரன் சகஸ்ர பலிக்குக் கொடுத்து தேவர்களைப் பிடித்துக் கட்டிவிட்டுத்தான் ஒரு பெரிய பர்வதத்தின் சிகையில்தபசு செய்யப் போய்விட்டான். இதை யறிந்த தேவர்கள் சதபலியை இவ்வாறே விட்டுவிட்டால் தபசினாலுயர்ந்து தன் மகனோடு இன்னும் நம்மை அதிக தொந்திரவுக்குள்ளாக்குவானாகையால் இப்பொழுதே இவனைக் கொன்றுவிட வேண்டும் இவன் தனியாகவிருப்பதால் இதுவே தக்க சமயம் என்று எல்லா தேவர்களும் மலையை நோக்கிப் புறப்பட்டார்கள். அவ்வசுரன் தபசியாக விருப்பதால் தபசியை ஆயுதப் பிரயோகத்தால் இம்சித்துக் கொல்லுவது தருமமல்லவென்று அவனைப்பலவாறாக நிந்தித்து அவமானமுண்டாக்க, அதனால் தபசியான சதபலி உயிர் துறந்தான். உடனே அவனுடைய சிர செலும்பில் சிறிது தேவேந்திரனுக்கு வஜ்ஜிராயுதமாகவும், மீதியான சிரசெலும்பு விஷ்ணுவுக்கு சக்ராயுதமாகவுமாயிற்று. அவனுடைய பிஷ்டார்த்த அஸ்தி ஈஸ்வரனுக்கு பிநாகமென்கிற வில்லாயிற்று. மற்றதை பெரிதான காண்டீபமென்னும் வில்லாக்கி வருணனுக்குக் கொடுத்தார்கள். வருணன் அதை பார்த்தீபனுக்குக் கொடுத்தான். சரீரத்திலிருந்த அஸ்தி யெல்லாம் எல்லா தேவர்களுக்கும் வில்லாயிற்று. கை எலும்புகள் எழுநூறு தண்டுகளாயிற்று. அதில் நீலமுகம் கௌரக்ஷிபாலகனுக்கும், ருதிமுகம் பீமனுக்கும் கொடுத்த பின் மீதியை தேவ சமூகங்களுக்கு ஆளுக்கொன்று கொடுத்தார்கள் இவ்வாறு ஒரு மனிதனுடைய உடலெலும்புகள் முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் ஆயுதங்களாகும்போது ஒரு சண்டெலியின் எலும்பு எங்களிருவருக்கும் ஒவ்வொரு ஆயுதமாகாதா? கூறுங்கள்! இத்தகைய கதை உங்கள் மதப் புராணத்திலிருக்கிறதா? இல்லையா? கூறுங்கள்!!" என்று வாதித்தான். உடனே அங்கி

ருந்த மற்ற எல்லா ஜனங்களும் "ஆம் ஆம் இது உண்மை இது மிகவும் பிரசித்தமான கதை. நாங்கள் இக் கதையை நேற்றுக்கூட படிக்கக்கேட்டோம்" என்று கூச்சலிட்டனர்.

ஐயா! விப்பிர சிகாமணிகளே எங்களைப் பொய்யரென் றீர்களே! "இதோ உங்கள் புராணச் சாயம் வெளுக்கிறதே! என்ன சொல்லப் போகிறீர்கள்?" என்றனன், விப்பிரர்கள் மௌன முற்றார்கள். ஜனங்கள், இருவருக்கும் ஜெய வீரபட் டம் அளித்தார்கள். பிறகு இருவரும் வெளியேறி விட் டார்கள்.

---

## மூன்றும் நாள்

---

மனோவேகன், வாயுவேகன் ஆகிய மேல் கண்ட நம் நண் பர்கள் ரிஷிரூபந்தரித்துக்கொண்டு மூன்றும் நாள் பிரம்மாலய த்தின் வாயு மூலையில் சென்று அங்கு கட்டியிருக்கும் பேரிகை யை அடித்து சிம்மாதனத்தில் வீற்றிருந்தார்கள். உடனேபொ துஜனங்கள் வெகு ஆவலுடன் வந்து கூடினார்கள். விப்பிர ஜன ங்களும் இச்சப்தம்கேட்டு பிரம்மாலயம் புகுந்து சிம்மாதனத் தில் வீற்றிருக்கும் இரண்டு ரிஷிகளையும் கண்டு சுவாமி ரிஷி களே! அச் சிம்மாதனத்தில் எங்களுடன் வாதத்தில் ஜெயிக் கப்பட்டவர்களே யன்றி ஏனையோர் அவ் வாசனத்தில் அம ரக்கூடாது" என்றனர். உடனே இரு ரிஷிகளும் எழுந்து "உங்களுடன் என்ன வாதம் புரியவேண்டும் கூறுங்கள்" என்றனர். "நம் வாதம் ஆரம்பிப்பதற்கு முன் தாங்கள் யார்? எந்த குருவினிடத்தில் வாசித்தீர்கள்? அல்லது நீங் கள் யாருக்காகிலுங் குருவாக விருக்கின்றீர்களா? நீங்கள் தவவேடம் பூண வேண்டிய வைராக்கியம் வந்த காரணம்

யாது? என்பதை விளங்கக் கூறி பிறகு தங்கள் வாதத்தை ஆரம்பிக்கலாம்” என்று விப்பிரர்கள் வினவினார்கள். அதற்கு அவ்ரிஷிகள் “ஐயா விப்பிரர்களே! எங்களுக்கு குருவுங் கிடையாது, சிஷ்யாளுங்கிடையாது. இந்த வேடத்திற்கு வைராக்கியமும் எவராலும் நேரவும் இல்லை. நாங்களே வேஷமும் தரித்ததல்ல. விதியால் வந்த வேடமிது” என்றனர். விப்பிர ஜனங்கள் ஆச்சரியமுற்று “இந்தப்படி ஆக நேரிட்ட வினைக்காரணத்தை அறியக் கூறுங்கள்” என்று வேண்டினர். உடனே “மனோவேகன் எழுந்து நாங்கள் அயோத்தியாபுரத்தில் சமுத்திரதத்தன் என்னும் வணிகனுடைய புதல்வர்கள். நாங்கள் வேடிக்கையாகக் காட்டில் உலாவச் சென்றோம். அப்பொழுது ஒரு யானை மதங்கொண்டு மரங்களை முறித்துத் தள்ளிக்கொண்டு வரும்போது எங்களையும் கண்டு துரத்த ஆரம்பித்தது. நாங்களும் நடுநடுங்கி ஓடி வருகையில் யானையும் பின்னே வரக் கண்டு இனி ஓட முடியாது என்று நினைத்து அவதிப்படும் போது அந்த ஒரு ரிஷி தன் கமண்டலத்தைத் துட்டைச் செடியில் மாட்டிவிட்டு தபசிலிருந்ததைப்பார்த்தோம். இதுவே சமயமென நாங்களிருவரும் அக்கமண்டலத்தின் மேல் மூடியைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்துகொண்டு மேல் மூடியை மூடுகையில் நாளிகா துவாரத்தை மூட மறந்துவிட்டோம். பின்னே ஓடி வந்த யானை நாங்கள் மறைந்திருக்கும் கமண்டலத்தை சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கடைசியாக நாளிகாதுவாரத்தின் வழியாய் உள்ளே புகுந்து எங்களைத் துரத்த ஆரம்பித்தது. உடனே நாங்கள் ஓட யானை துரத்த, இரண்டு வாரம் உள்ளேயே சுற்றிச் சுற்றி ஓடி ஓடி கடைசியாக நாளிகா துவாரத்தின் வழியாய் வெளியே வந்து விட்டோம். யானையும் அவ் வழியாகப் பின் தொடர்ந்துவர அத

னுடைய வால் மயிர் நாளிகா துவாரத்தின் வெளிப் புறத்தில் சிக்கிக்கொண்டு வரமுடியாமல் எங்கள் திசையை நோக்கிப் பார்த்துக்கொண்டு உடலெல்லாம் வெளியேயும் வால் மயிர் கமண்டலத்திலுமாய் நின்றுவிட்டது. நாங்கள் காடேசரண மாக கண் மண் தெரியாமல் ஓடி வரும்வேகத்தில் எங்கள் தலை மயிர்களும் வஸ்திரங்களும் வழிகளிலுள்ள முட்செடிகளில் சிக்கி அறுந்தும் கிழிந்தும் போக, கௌபீனந் தப்பி வந்த ரிஷிகளானோம். இதுவே எங்கள் வேடத்திற்கு காரணமும் இதுவே தலைதப்பி வரும் பிரயாணமும் ஆகும்" என்றனர்.

இதைக் கேட்ட மஹாஜனங்களும் விப்பிரர்களும் சிரித்தும் கைகொட்டியும் சப்த முண்டாக்கினார்கள். சப்தமடங்கியதும் விப்பிரர்கள் "ஐயா அண்டப் புளுகர்களே! என்ன அநியாயம்! இவ்வளவு ரூபலாவண்ணியமும் கல்வி ஞானமும் ஒருங்கே படைத்த நீங்கள் இத்தகைய அபத்தமொழிகள் கூறலாமா? ஆஹா தும்பைச்செடியில் கமண்டலம் தொங்கினதாம். இவர்களிருவரும் யானையும் அக்கமலண்டலத்துக்குள்ளே புகுந்துகொண்டார்களாம். இரண்டு வாரம் சுற்றினார்களாம்! பிறகு இவர்கள் நாளிகா வழியாய் வெளியேவந்து விட்டார்களாம்! யானைக்கு எல்லா பாகமும் வெளியே வந்ததும் வால் ரோமத்தில் ஒன்று மாத்திரம் சிக்கிக்கொண்டு நின்று விட்டதாம்! இந்த ஆகாசப் புளுகை அறிவில்லா மூடர்களிடத்தில் சொல்லி கௌரவம் பெறலாமேயன்றி எங்களைப் போன்ற உயர்ந்த அறிவாளிகளிடத்தில் மொழிவது அசட்டுத்தனமாகத்தான் முடியு"மென்று நகைத்தார்கள்.

மனோவேகன் பயமின்றி எழுந்து, ஹே! அறிவாளிகளே! உங்கள் மதப் புராணங்களில் இத்தகைய அசட்டுத்தனமான சரித்திரக்கதைகள் ஒன்றுமே இல்லையோ? என்று

கேட்டுவிட்டு பொதுஜனங்களைப்பார்த்து சொல்லுகின்றார்கள். கேளுங்கள் பொதுஜனங்களே! நீங்களும் கவனமாய்க் கேளுங்கள். உங்கள் மதபுராணத்தில்,

"பிரம்மா உலகத்தை சிருஷ்ட்டித்து விஷ்ணுவை ரட்சகனாக ஏற்படுத்த விஷ்ணுவும் உலகங்களை யெல்லாம் தன்னுதரத்திலே வைத்துக்கொண்டனன். அவ்வமயம் ஈஸ்வரன் திருவோடு யெடுத்து பிச்சைக்குவர அகஸ்திய முனி ஈஸ்வரனைப் பார்த்து அதோ செடியில் தொங்கிக்கொண்டிருக்கும் கமண்டலத்துக்குள்ளே போவென்று கூற ஈஸ்வரனும் அவ்வாறே சென்றனன். அக் கமண்டலத்துள் சகல சமுத்திரங்களும் அச் சமுத்திரங்களின் மத்தியில் பிரம்மாண்டமான ஒரு ஆல விருக்ஷத்தையும், அம் மரத்தின் ஓர் இலையில் பள்ளி கொண்டிருக்கும் மஹாவிஷ்ணுவையும் கண்டு வெளி வந்தனன். பிறகு பிரம்மா அவ்வாறே சென்று கமண்டலத்திலுள்ள சமுத்திரங்களையும் ஆல விருக்ஷத்தின் இலையில் உறங்கிக் கொண்டிருக்கும் மஹாவிஷ்ணுவையும் கண்டு பூலோகத்தைத் தேட யத்தனிக்கையில் மஹாவிஷ்ணு உறங்கிக்கொண்டே கொட்டாவி விட அப்போது பிரம்மா விஷ்ணுவின் வாயினுள் நுழைந்து வயிற்றுக்குள்ளே போய் சகல பூமிகளையும் கண்டு களித்தனன். பூலோகத்தை வெளியே கொண்டுவர பிரம்மாவானவன் விஷ்ணுவினுடைய வயிற்றிலே இருந்துகொண்டு திக்கு திக்காக நோக்கி கடைசியாக விஷ்ணுவின் நாபிக்கமலம் வழியாக வெளிப்படுத்தத் துணிந்து சகல பூமிகளையும் நாபிக்கமலத்தின் வழியாக வெளிப்படுத்திவிட்டு தானும் வெளிவரும்போது விண்டுவின் கமல மத்தியத்தில் சிக்க அவனும் கமலாசனமாக அவ்விடத்தமர்ந்தானென்று (உங்கள்மதப்புராணத்தில்) இல்லையோ கூறுங்கள்" என்றும் வாதித்து நின்றனன். விப்பிரர்

கள் மறு உத்தரம் கூறாது மௌன முற்றனர். "பொது ஜனங்கள் பிரசித்தமாய் உண்டு! பிரசித்தமாயுண்டு!" என்று கூவினர். மேலும் மனோவேகன் எழுந்து சொல்லுவதாவது:- "மற்றொன்று கேளுங்கள்! அஸ்தினாபுரத்தை ஆண்ட சத்தியநிதி யுதிஷ்டிரனென்பான் பலவிதமான யாகங்கள் செய்ய வேண்டி விப்பிர பண்டிதர்களையும் நைமித்தகர்களையும் அழைத்து யாகத்துக்கு நாள் ஏற்படுத்திய பிறகு இந்த யாக பலத்தை அந்நியர் கைக்கொள்ளாமலிருக்க உபாயம் கூறுங்களென்று நைமித்தகரை கேட்டனன். நைமித்தகர்கள் ஆராய்ந்து "பாதாள லோகத்தில் நாகதேவனென்றும் யோகீஸ்வரனென்றும் இருவர் உளர்; அவர்களை நம் யாகசாலைக்குக் காவல் வைத்துவிடின் நம் யாக பலத்தை அந்நியர் கைக் கொள்ள முடியாது" என்று கூறினர். அரசன் அவர்களைக் கொண்டுவரும் சாமர்த்தியர் யாருளரென்று சிந்தித்துக் கடைசியாக பார்த்திபனைக் கண்டு குறையிரந்தனன். உடனே அருச்சுனன் காண்டிபந் தொடுத்துவிட அது பாதாள லோகஞ் சென்றது. அதைக் கண்ட நாகராஜன் கோபத்துடன் வெளிவந்து அருச்சுனனோடு போர் புரிந்து தோல்வியடைந்தனன் நாகேந்திரன் அருச்சுனனை மெச்சி அவனுக்குத் தன் குமாரத்தி நாகதத்தையை விவாகஞ் செய்து கொடுத்து பிறகு நாகலோகத்திலிருந்து பிலத்துவாரத்தினால் சதுர்மகா சைனியங்களோடு பூலோகத்திற்கு வந்து யாகம் நடத்தி ஆட்டையும் குதிரையையும் மனிதனையும் பொசுக்கித் தின்றார்களென்று கூறியிருப்பது பொய்யா! மெய்யா! கூறுங்கள். அதுவுமன்றி ஒரு அங்குஷ்டத்தின் அளவுள்ள அகத்தியன் சமுத்திரத்தை இரு கைகளாலும் அள்ளிக் குடித்தானென்றும் கூறுகின்ற புராணம் உங்களிடத்தில் தானே இருக்கின்றது. அடடா! சமுத்

திரம், தீவு, பூமி, நதி, அதில் வசிக்கும் ஜீவராசிகள் இவைக ளெல்லாம் ஒரு கமண்டலத்தில் தங்கியிருக்கும்போது இரு மனிதர்களும், ஒரு யானையும் ஒரு கமண்டலத்தில் இருக்கக் கூடாதா? ஐயா விப்பிரர்களே! எங்களைப் பொய்யரென்று கூறுகின்றீர்களே! உங்கள் பொய்க் கதைகளை எந்த அறிவிலியி னிடத்தில் கூறுவது? எந்த அறிவாளியாவது உங்கள் புரட்டை ஒப்புக்கொள்ளுவானா? அதன் வழி ஒழுகுவானா? நாங்கள் சொன்னதை மூடர்களிடத்தில் சொல்லச் சொன்னீர்களே! இப்புராண ஆபாசங்களை யாரிடத்தில் சொல்லுவது? ஏன் மௌனமாயிருக்கிறீர்கள்? பதில் கூறுங்கள்'' என்றனன். உடனே விப்பிரர்கள், "நீங்களே ஜெயவாதிகள்'' என்று கூறிவிட்டு தரையைப் பார்த்துக்கொண்டே தங்களில்லம் போய்ச் சேர்ந்தார்கள். பொது ஜனங்கள் இவ்விரு இளை ஞர்களையும் போற்றிப் புகழ்ந்ததுடன் "இப்பொழுதுதான் இப்புராணங்களெல்லாம் அண்டப் புளுகு, ஆகாசப் புளு கும் நிறைந்த ஆபாசக் கதைகள் என்று தெரிந்தது'' என்று பேசிக்கொண்டே யாவரும் வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

---

## நான்காம் நாள்

---

சன்மார்க்க சீலர்கள்—சகல கலா வல்லவர்கள்—பொது ஜன ஊழியர்களான மனோவேகன், வாயுவேகன் ஆகிய இரு வரும் நான்காம் நாள் சடைதாரிகளாகி பாடலீபுரத்து மேற்கு கோபுர வாயிலாக பிரம்மாலயம் புகுந்து பேரிகை கொட்டி சிம்மாதனத்தில் வீற்றிருந்தார்கள். பட்டின முழுமையும் சப்தங் கேட்டு பாமர ஜனங்களும் பார்ப்பன வித்வாம்ஸர் களும் அங்குவந்து சேர்ந்தார்கள். இரண்டு மூன்று நாளாய்

தோல்வியடைந்த பிராமணர்கள் இன்று வந்துள்ள சடாமுடி தாரிகளைக் கண்டவுடன் மனதில் பயமதிகரித்து இன்று வந்த இவர்கள்கூட சரியான ஆசாமிகளாகவே காணப்படுகிறார்கள் என்றாலும் எவ்வாறாயினும் இவர்களையாவது ஜெயித்தா லன்றி நமக்கு இனி இங்கு கௌரவம் வராதென்று கருதி விப்பிரர்கள் எழுந்து "ஹே ரிஷிகளே! எங்களை வாதத்தில் ஜெயிக்காமல் சிம்மாதனத்திலமர்வதும் பேரிகை அடிப்ப தும் இவ்விடத்து நீதிக்கு விரோதமாகும். உங்களுக்கு தீக்ஷை பண்ணிவைத்த குரு யார்? உங்களால் எங்களை வாத த்தில் வெல்ல முடியுமா? கூறுங்கள்" என்று கேட்டனர். உடனே போலி சடாமுடிதாரிகளான மனோவேகன் வாயுவே கனிருவரும் சிம்மாசனத்தை விட்டிறங்கி "எங்களுக்கு குரு யாருமில்லை. எங்கள் தபசின் விருத்தாந்தம் சொல்வதென் றால் பித்த சுரமுள்ளவர்களுக்குப் பாலும் சர்க்கரையும் கல ந்து கொடுத்தால்கூட எப்படி சுசிக்காதோ அது போன்றே எங்கள் விருத்தாந்தம் உங்களுக்குப் பிடிக்காது. வாதம் பண்ணவேண்டுமானால் ஏதோ சிறிது செய்யத் தயாராக இருக்கிறோம்" என்றனர். இதைக் கேட்ட விப் பிரர்கள் "வாதம் ஆரம்பிப்பதற்குமுன் உங்கள் முழு விருத் தாந்தம் இந்தச் சபையாருக்கு அறிவிக்கப்பட வேண்டும். ஆகையால் உங்கள் விருத்தாந்தங்களைச் சொல்லுங்க" ளென்றனர். உடனே மனோவேகன் எழுந்து சொல்லு கிறான்.

"பயோதபுரமென்னும் நகரத்தில் தனத்தனென்கிற வைசியருக்குத் தேவதத்தை என்கிற அழகிய பெண் இருந் தாள். அவளை அநேக வைசிய வாலிபர்கள் மணக்க ஆவல் கொண்டு கடைசியாக சுதத்தனென்கிற ஒரு வைசியருக்கு மணமுடிக்க ஏற்பாடாகி முகூர்த்தத்தின தினன்று அவ்வூர்

அரசனுடைய பட்டத்து யானை மதங்கொண்டு கர்ஜித்து ஜனங்களைத் துரத்தியடிக்க அதைக்கண்டு பயந்தோடும் ஜனங்களுடன் முகூர்த்த பந்தலிலுள்ளவர்களும், மணமகனும் மணமகளும் ஓடும்போது கணவன் கரம் மனைவியின் வயிற்றிற்படஅம்மணமகள் அதுவே கர்ப்பமாயினள். அப்போதுகர்ப்பமாயிருந்த தேவதத்தை தன் தாய் வீட்டில் நவமாச கர்ப்பம் பரிபூரண மாகியிருக்குங் காலத்தில் தக்ஷணத்திலிருந்து சில யாத்ரீகர்கள் அவள் வீட்டுத்திண்ணையில் வந்தமர்ந்தார்கள். அப்பொழுது தேவதத்தை யாத்ரீகர்களைக் கண்டு "நீங்கள் யார்? எவ்விடத்து வந்தீர்கள் ? எங்கு போகின்றீர்கள்?" என்று வினவினாள். அதற்கவர்கள் "நாங்கள் தட்சண தேசத்திலிருந்து வந்தோம்; அந்த பஞ்ச காலம் வந்துவிட்ட படியால் வடக்கே போகின்றோம்" என்றார்கள். "ஆனால், இவ்வூரிலேயே இருங்கள்" என்று அவ்வம்மைப் பகர்ந்தனள். அதற்கவர்கள், "இவ்விடத்தும் பஞ்சம் வரப்போகிறது; அது பன்னிரண்டு வருஷம் நீடித்திருக்கும். ஆகையால் நாங்கள் இன்னும் வடக்கே போய்விடுகின்றோம்" என்றனர்.

அதைக்கேட்ட தேவதத்தை "நீங்கள் பன்னிரண்டு வருஷமும் எங்கள் வீட்டிலேயே இருங்கள்; நாங்கள் காப்பாற்றுகின்றோம்" என்றனள். அவர்களும் அவ்வாறே சம்மதித்தனர். இந்த விருத்தாந்தத்தைக் கேட்டிருந்த அவள் வயிற்றிலுள்ள இரு குழந்தைகளும் பஞ்சத்திற்குப் பயந்து, பன்னிரண்டு வருஷமும் வயிற்றிலேயே தங்கி பஞ்சம் நீங்கி மேல்கண்ட யாத்ரீகர்கள் இருவரும் விடைபெற்றுக்கொண்டு போனவுடன் அவ்விரண்டும் வாயின் மூலமாக ஜெனித்து தாயினுடைய மயிரைப் பிடித்துக்கொண்டு போஜன மளிக்கச்சொல்லிச் சிரசைக்கடித்தன. இதைகண்ட

தாயார் இதுகள் ராக்ஷஸக்குழந்தைகளென்று பயந்து ஓடி விட்டாள். பட்டினத்திலுள்ள மற்ற ஜனங்களும் அக் குழந்தைகளைத் துரத்தியடித்தனர்கள். அதனால் அக் குழந் தைகள் ஊரைவிட்டு ஓடி, தலைக்குத் தடவ எண்ணையின்றி இடுப்புக்குக் கட்டத் துணியின்றி ஜடாதாரியாகவும் கௌபீ னதாரியாகவும் சுற்றினார்கள். அந்த இரு பிள்ளைகள் தாம் நாங்கள். எங்கள் மாதாபிதாக்களுக்கு இப்போது விவாகமா கையால் அதைப் பார்த்து விட்டு இப்போது இங்கு வந்தோம். இது தான் எங்கள் தபசுக்குக்காரணம்" என் றனன். இதைக்கேட்ட விப்பிரர்களும் பொதுஜன ங்களும் ஒருவருக்கொருவர் பார்ப்பவரும் மூக்கின்மேல் கையை வைத்துக்கொண்டு கல கல வென்று நகைப்பவரும், கை கொட்டுபவர்களுமாய் ஆச்சரியமுற்றார்கள். விப்பிரர்கள், "ஐயா தபசர்களே! உங்கள் புழுகுக்குச் சடைபுழுகு என்று பெயரா? இது தீவர்புழுகாயிருக்கிறதே? சொல்லுபவர் சொன்ன லும்கேட்பவருக்கு மதியில்லையா? என்ன எங்களை மதியீனர் களென்று நினைத்து விட்டீர்களா? உங்கள் வார்த்தைகளில் ஒரு சத்தியம் கூட காணமுடியவில்லையே? புருஷனுடைய கரம் ஸ்திரீயின்மேல் பட கர்ப்பமாவதும், கர்ப்பத்திலிருந்த சிசு க்ஷாமங்கேட்டு பயந்து பன்னிரண்டு வருடம் கர்ப்பத்தி லேயே தங்குவதும், பிறப்பாடு வாயிலால் பிறப்பதும் உடனே தாயாரை ஆகாரங்கேட்பதும் முதலாகிய அண்டப் புழுகு களை யார் சொல்லுவார்கள்? யார் நம்புவார்கள் என்று பரி காசமாய்ஏசினார்கள்.

ஐயா விப்பிரர் களே! உங்கள் மத புராணங்களில் இத்த கைய அபத்தங்கள் ஒன்றுமில்லையோ? நான் எடுத்துக்காட்டி னால், சொன்னால் அப்பொழுதாவது நம்புவீர்களா? என்று சொல்லி மனோவேகன் சொல்லுகிறான்:—

"அயோத்திமாநகரின்கண் திரிதரன் என்ற அரசனுடைய தங்கைமார்களிருவரும் ஒருவரோடொருவர் அணைத்துக்கொண்டு நித்திரை செய்கையில் ஒருவளுக்கு அதனாலேயே கர்ப்பமாகி லோகப்பிரசித்தமான பகிரதன் ஜனித்தான் என்றும், சௌரிய புராதிபதி அந்தகவிருஷ்ணியின் சகோதரனுடைய புத்ரி காந்தாரியை திருதராஷ்டிரனுக்குக் கொடுக்க அவளும் இஷ்ட விஷய காம போகங்களை அனுபவி த்து வருகையில் ஒரு நாள் வீட்டுக்கு விலக்காகி (மாதாந்தர ருது) நான்காம் நாள்ஸ்நானத்திற்கு வனப்ரதேசம் வருகையில் திருதராஷ்டிரனை நினைத்து அங்குள்ள ஓர்விருக்ஷத்தை ஆலிங்க னம் செய்ய அவளுக்கு அதனாலேயே கர்ப்பமாகி நவமாதஞ் சென்று துரியோதனாதிகள் பிறந்ததாக உங்கள் மதபுராணத் தில் கூறப்பட்டிருக்கவில்லையா? ஒருபெண் மரத்தைக் கட்டி அணைத்து மக்களைப் பெறும்போது புருஷன் கை மனைவி மேரில் பட்டு எங்கள் மாதா எங்களை ஏன் பெற்றிருக்க மாட் டாள்? என்று கேழ்க்க பிறக்கலாம் பிறக்கலாம் என்று கூவி னார்கள்.

இதைக்கேட்ட விப்பிரர்கள் பிரள பிரள விழித்துக்கொ ண்டிருக்க அங்குள்ள ஜனங்கள் "அம்மாதிரியான கதைகள் நிறைய யிருக்கின்றன. பாவம் பிராமணோத்தமர்கள் தங்கள் தோல்விக்காக வெட்கமுறுகிறார்கள்" என்று பரிகாசம் செய் தார்கள். உடனே பிராமணர்கள் எழுந்து "இதுவரை சொன் னவைகள் எங்கள் புராணங்களில் இருக்கின்றன; இல்லை யென்று மறுக்கவில்லை. ஆனால் கர்ப்பத்திலிருக்கும் சிசு வெளியில் நடக்கும் சம்பாஷணைகளைக் கேட்டது என்பது எவ்வாறு பொருந்து"மென்று வினவினார்கள்.

அதற்கு மனோவேகன், "சரி; உங்கள் சர்வ வல்லமை புள்ள நாராயணன் கிருஷ்ணாவதாரத்தில் தன் தங்கைசுபத்தி

ரையை அர்ச்சுனனுக்கு விவாகஞ் செய்து கொடுத்து அவள் கர்ப்பிணியாகி வீட்டிற்கு அழைத்து வரப்பட்டபின் கர்ப்ப வேதனையால் அவள் கஷ்டப்பட, அப்பொழுது கிருஷ்ணன் சக்கிர வியூக விருத்தாந்தத்தைச் சொல்லிக்கொண்டுவர, அவ ளும் ஆவலுடன் கேட்டு கர்ப்ப நோய் தெரியாது தன்னை மறந்து நித்திரையில் ஆழ்ந்திருந்தாள். அப்பொழுது அவள் வயிற்றிலிருந்த சிசு தாய்க்குப் பதிலாக 'ஊம் ஊம்' என்று கதைகேட்டுவந்து, பிறந்தது. அந்தக்குழந்தை தான் அபி மன்யு குமாரன்என்று கூறப்பட்டிருக்கிறதே. நாங்கள் சப்தஞ் செய்யாமல் சங்கதியை மாத்திரம் கேட்டிருந்தோமென்றால், எங்களைப் பொய்யரென்றீர்களே" என்றான்.

இதற்கும் அங்குள்ள ஜனங்கள் ஆமாம், ஆமாம், நேற்று கடைத்தெருவில் நடந்த பாரத காலக்ஷேபத்தில் கூட இந்தக்கதை விஸ்தாரமாகச் சொல்லப்பட்டது" என்று இரைச்சலிட்டனர். விப்பிரர்கள் ஒன்றும்சொல்ல முடி யாமல் வெட்கி சற்றுநேரம் யோசித்து, "சரி ரிஷி களே! கர்ப்பத்தில் பன்னிரண்டு வருஷம் இருந்ததாக பகர்ந்தீர்களே! இது உண்மையா? இதற்கு பதிலுரைக்கா விடில் உங்களை ஊரைவிட்டு ஓட்டிவிடுவோம்" என்று கோபா வேசத்துடன் கேட்டனர். மனோவேகனும் புன்சிரிப்புடன் "ஓ பிராமணோத்தமர்களே! எங்களுடைய கொள்கையை நீங்கள் அறிய மாட்டீர்கள். உங்களிடத்தில் தோல்வியடைந் தால் உயிரை விட்டு விடுவது என்று உறுதி கொண்டு இரு க்கின்றோம். எங்களை நீங்கள் ஊரைவிட்டு ஓட்டுமுன் நாங் கள் உடலை விட்டு ஓடிவிடுவோம். கோபமின்றி சாந்தமாகக் கேளுங்கள். மாயனென்ற ஓர் தபசன் நித்திரை செய்யுங் காலத்தில் இந்திரியம் ஸ்கலிதமாகி கௌபீனம் நனைந்த போது அதை அங்குள்ள ஒரு தடாகத்துத் தண்ணீரில் கசக்

கிப் பிழிய, அந்த இந்திரியத்தை ஒரு மண்டூகம் புசிக்க அது கர்ப்பமாகி மானிடப் பெண்ணாய்ப் பிறக்க அதுகண்ட மண்டூகம் அப் பெண்ணைக்கண்டு பயந்து கமல புஷ்பத்தின் மத்தியில் விட்டுவிட்டுப்போக அக்குழந்தை நாலா திக்குகளிலேயும் பார்த்துத் திகைத்துக் கொண்டிருக்க அச்சமயம் அந்த ரிஷி சந்தியாவந்தனத்திற்கு வர, அங்குள்ள பெண் குழந்தையைக் கண்டு அது தன்னுடைய இந்திரியத்தால் பிறந்த குழந்தை யென்றறிந்து எடுத்துக் கொண்டு போய் மண்டோதரியென்று நாமமிட்டு வளர்த்து வந்தார். மற்றொருநாள் அந்த ரிஷிக்கு இந்திரியம் ஸ்கலிதமாகி கௌபீனத்தில் பட அதை அவிழ்த்து செடியின் பேரில் போட்டு விட்டு வேறொரு துண்டை கட்டிக்கொண்டு தபசிலிருக்க, அந்தப் பெண் செடியிலிருந்த கௌபீனத்தை எடுத்துக் கட்டிக்கொண்டதால் இந்திரியம் ஒட்டிக் கர்ப்பமாயினள். அவள் கர்ப்பமானதை யறிந்த ரிஷி அது நிந்தனையாகுமென்று கருதி 700 வருஷம் அந்த கர்ப்பத்தை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டார்.

பிறகு அவளை இலங்காபுரி மன்னனாகிய இராவணேஸ்வரனுக்கு மணம் புரிவித்து அனுப்ப இருவரும் சுக போகங்களை அனுபவித்து 700 வருஷமாக தங்கியிருந்த கர்ப்பம் பிரசவமாகி புத்திரனாக இருக்கக்கண்டு இந்திரஜித்து என்கிற நாமங்கொடுத்தார்கள். அப்பிள்ளை 700 வருஷமாக மாதா வயிற்றில் தங்கியிருந்ததென்றால் நாங்கள் பன்னிரண்டு வருஷம் தங்கியிருக்கக் கூடாதா? கூறுங்கள் எங்களை எப்படி பொய்யரென்றும் புகலலாம்" என்றனன். உடனே விப்பிரர்கள் "நாழிகையாய்விட்டது, இனி நாளைக்கு வாதிக்கலாம்" என்று எழுந்தனர்.

அங்குள்ள ஜனங்கள் கூடாது கூடாது இன்னும் மூன்று கேள்விகள்தான் இருக்கின்றன. அதையும் விவாதித்து விடுங்

கள். இப்போது சபை கலையக் கூடாது என்று ஆக்ஷேபித்தனர். விப்பிரர்கள் ஒன்றும் பேசமுடியாமல் எழுந்து மனோவேகனைப் பார்த்து கூறியதாவது:— ஐயா ரிஷிகளே! வாயினால் பிறந்தோமென்பதும், பிறந்ததும் தாயை ஆகாரம் கேட்டதென்பதும், பிள்ளை யிருக்கத் தாய்க்குக் கலியாணமாயிற்றென்பதாகிய மூன்று அபத்தங்களுக்கும் தக்க சமாதானம் கூறுங்கள்" என்றனர்.

மனோவேகனும் வரிசையாகச் சொல்ல ஆரம்பித்தான்:—

1. வாயினால் பிறந்தனம் என்பதை பொய்யென்று புகலும் நீங்கள், உங்கள் புராணத்தில் குந்தியினுடைய ஜேஷ்டப் புத்திரன் கன்னத்தினால் பிறந்தான் என்பதை நம்பும்போது நாங்கள் வாயினால் பிறக்கக் கூடாதா?

2. பிறந்ததும் தாயாரை சிரசைக்கடித்து ஆகாரம் கேட்டதென்பதற்கும், உங்கள் புராணத்தில் பராஸர முனி கங்கையிலிறங்கி நீந்தி ஓடக்காரனைத் தேடுகையில் அங்கே ஓடக்காரனின் புத்திரியைக் கண்டு மோகித்தானாக அவளை அழைக்க அவள், "நான் ஈனக் குலத்தாள், நீரோ உயர்ந்த குலத்தார். ஆகையினால் இது தகா" தென பராசரரும் காமத்திற்குக்கண்ணில்லை; வந்து கூடுவாயானால் உனக்கு அனேக நன்மையைச் செய்வேன்; பயப்படாமல் வா" என்று அழைக்க அவளும் அருகில் வந்தனள். உடனே பராசரன் அவளை அணைக்கும் தருவாயில் அவர் சரீரத்தில் பரிமளம் வீசுவதைக் கண்ட அப்பெண் இம்மாதிரியான பரிமளம் என் தேகத்திற்கு உண்டானால் கூடுவேன்" என்றனள். உடனே பராசரரும் அவ்வாறே பரிமள முண்டாக்கி அதில் இருவருஞ் சுகித்திருக்கையில் உடனே நவமாச கர்ப்ப பூர்த்தியாகி ஜடை கௌபீனத்தோடு கூடிய வியா

சர் பிறந்து பராசரனைப் பிடித்துக் கொண்டு "அப்பனே! எனக்குப் பிழைப்பருள்வாய்" என்று கேட்க பராசரரும் "எங்களைப்போன்று ரிஷியாக இரு" என்று விடையளித்த தாகக் கூறப்பட்டிருக்க வில்லையா?

3. தனையனிருக்கும்போது தாய் கன்னிகையாக விருந்தாளென்பதற்கு உலூஹமுனி யென்பான் கங்கையில் ஸ்நானஞ்செய்து இந்திரியம் ஸ்கலிதமான தன் கௌபீனத்தை ஒரு தாமரைப் புஷ்பத்தில் பிழிய, அதை அயோத்யாபுரி அதிபதியான ரகுவின் புத்ரி சந்திரமதி அவ்இந்திரியந் தங்கியிருந்தக் கமல புஷ்பத்தைப்புசிக்க அதுவேகர்ப்ப மாகிவிட, அதைவீட்டிலுள்ள தாய் தந்தையர்களறிந்து காரணம் விசாரிக்க அப்பெண் பயந்தவளாகி "நான் யாருடனும் கூடினதில்லை. ஒரு கமல புஷ்பத்தைப் புசித்தேன். அன்று முதலே இந்த விபரீதம் விளைந்தது" என்று அழுதனள். இதைக்கண்ட அரசன் இரகசியமாகக் காப்பாற்றி நவமாசமானவுடன் பெற்ற பிள்ளையை வீட்டிலேயே வளர்த்து வந்தான். இவ்வாறாக ஒரு நாள் உலூஹ முனி அவ்வீட்டிற்குப் பிக்ஷைக்கு வந்து அப்பிள்ளையைப்பார்த்துத் தன் இந்திரியத்திற்குப் பிறந்தவனென்றறிந்து உண்மையை அரசனாகிய ரகுராஜனிடத்தில் உரைத்து, அப்பெண்ணை விவாகஞ் செய்து கொண்டானென்றும் உங்கள் பழுப்புரட்டு புராணத்திலிருக்க எங்களை அபத்தர்களென்று கூறுகின்றீர்களே" என்று முடித்தனன். இதைக் கேட்டுக் கொண்டிருந்த விப்பிரர்கள் ஒருவர் பின் ஒருவராக நழுவி விட்டார்கள். பொது ஜனங்கள் இவ்வாலிபர்களைப்புகழ்ந்து ஜெயவாதிகளென்றுசிறப்பித்து சிம்மாசனத்திலமரவைத்துக்கொண்டாடி தங்கள் தங்கள் இல்லம் போய்ச் சேர்ந்தார்கள்.

## ஐந்தாம் நாள்.

ஸ்ரீவிபுதப்ரயன்—வித்தியாபகன் — வாதவல்லபனுகிய மனோவேகன் தன் மித்திரன் வாயுவேகனுடனே கூடி மஞ்சளாடையுடுத்தி ஸ்வேதாம்பரி வேட தாரிகளாக பிரம்மாலயத்து அக்கினித் திசை வழியாகச் சென்று பேரிகை கொட்டி சிம்மாசனத்திலிருந்தனர். பேரிகை சப்தங் கேட்டதும் பல பொதுஜனங்களும், வேத சாஸ்திர, ஆகம, காவிய, நாடக லட்சணதக்ஷரென்ற விப்ர ஜனங்களெல்லாம் திரண்டுவந்து சிம்மாதனத்திலிருக்கும் இரு இளைஞர்களையும் ஆச்சரியமாகப் பார்த்து, ஹே! ஸ்வேதாம்பர முனிகளே! நீங்கள் யார்? உங்கள் குரு யார்? இங்கு வந்த காரணம் யாது? இவ்விடத்தில் எங்களை வாதத்தில் ஜெயிக்க வல்லவரே யன்றி ஏனையோர் பேரிகை கொட்டவும் சிம்மாதனத்திலமரவும் அருகராகார். ஆகையால் தகுந்த வாத வல்லமை பெற்றிருப்பின் வாதம் செய்து சிம்மாதன மேறுங்கள் என அவ்இருவரும் எழுந்து வேறாசனத்தில் அமர்ந்து மனோவேகன் விப்பிரர்களைப் பார்த்து "எங்களுக்குக் குரு யாருமில்லை. நாங்கள் காரணதபசிகளாகவந்தோம். எங்கள் ஊர் கூர்ஜர தேசத்தில் வசிச கிராமமாகும். நாங்கள் அவ்வூர் கிராமாதிகாரியின் புத்திரர்கள் எங்கள் வீட்டில் ஆடுகள் மந்தை மந்தையாக இருந்தனவாதலால் அவைகளில் சிலவற்றை யாங்களிருவரும் மேய்க்கும் தொழிலை ஏற்றுக் கொண்டிருந்தோம். அவ்வாறே இன்று ஆடுகளை மேய்க்கக் காட்டிற்கு ஓட்டிக்கொண்டு வந்தோம். அவைகளை மேய்த்து விட்டு அங்குள்ள மாமரத்தில் பழுத்திருக்கும் ரசமான பழங்களைக்கண்டு சாப்பிட அவாக் கொண்டோம். ஆனல் மரமேறத் தெரியாமல் சற்றுநேரம் விழித்துக்கொண்டிருந்து விட்டுகடைசியாக,

ஸர் வௌஷதீனும்சனம் ப்ரதானம்
ஸர் வேஷு பானேஷு ஜலம்பிரதானம்
ஸர்வேந்த்ரியாணும் நயனம் ப்ரதானம்
ஸர் வஸ்ய காத்ரஸ்ய சிரப்ரதானம்

என்ற சுலோகம் எங்களுக்குஞாபகம் வந்தது, அந்தப்படி எங்கள் தலையை வெட்டி மரத்திலெறிந்தோம். அத்தலைகள் மரத்திலுள்ள பழங்களைச்சாப்பிடச் சாப்பிடக் கீழே கிடந்த எங்கள் வயிறு நிரம்பிற்று. உடனே, தலையும் கீழேவிழுந்து உடலில் மாட்டிக்கொண்டது. பிறகு எழுந்தோம். எழுந்து ஆடுகளைத் தேடுகையில் அவைகள் காணுமையால் இனிமேல் வீடு சென்முல் பெற்ரோர் அடிப்பார்கள் என்று பயந்து இம் மாகிரியாக வேடம் பூண்டு தேச சஞ்சாரர்களாக வந்துவிட்டோம்" என்று கூறினான். உடனே விப்ர ஜனங்களும் மற்றவர்களும் பெரு நகைப்பு நகைத்தனர். விப்ர ஜனங்கள் ஐயா வேடதாரிகளே! இத்தகைய அபத்தவார்த்தைகள் பேசுவது உசிதமல்ல. சரீரத்தைக்கீழேவிட்டு சிரசு மாத்திரம் மரமேறிப் பழம் சாப்பிடுகிறதும், கீழே கிடக்கும் அந்தச் சரீரத்தின் வயிறு நிரம்புவதும், பிற்பாடு சிரசுசரீரத்தில் ஒட்டிக்கொள்வதும், உடனேஎழுந்து வருவதும், எந்தக் காலத்தில் எவரால் நடத்திக்காட்ட முடியும்? இத்தகைய அசம்பாவித கூற்றுகளை இப்பெருஞ்சபையில் கூறுவது தகாத செய்கையாகும் என்று கண்டித்தனர்.

உடனே மனோவேகன் சாந்தமான வார்த்தையால் விப்பிரர்களைப் பார்த்து, "நாங்கள் சொன்னவை அபத்தமாகில் உங்களுடைய புண்ணிய கதைகளாகிய இராமாயணம் பாரதம் முதலியவைகளில் இத்தகைய விஷயங்கள் இல்லையோ? உதாரணமாக உங்கள் இராமாயணத்தில் இராவ

ணன் என்ற இராக்கதன் திக்விஜயம் செய்யப் புறப்பட்டுச் சுற்றி வருகையில் கைலாசகிரியைத் தன்னுடைய தோளி ஞல் தூக்க, அதைக்கண்ட பரமேசுவரன் தன்னுடைய கால் பெருவிரலினுல் அழுத்த, பர்வதம் பளுவாகி இராவண ஞல் தூக்க முடியாமல் ஆச்சரியப்பட்டு தன்னுடைய பத்துத் தலைகளையும் குடுக்கையாகச் செய்து, கையைத் தண்டாக்கி, கை நரம்பைத் தந்தியாகச் செய்து, கீத ஸ்தோத்திரங்களால் சிவனுக்குச் சந்தோஷ முண்டாக்கி அவரிடமிருந்துசந்திரகா சம்என்னும் ஆயுதம் வாங்கி, அங்கே சேதனம் செய்து சிரசை ஈஸ்வரர் பாதத்திலே வைத்து அர்ச்சிக்க, உடனே அவைகள் கழுத்தில் ஒட்டிக்கொண்டனவென்பதாக கூறப்பட்டில்லை யோ? இதுவும்தவிர வாலியினுடைய குமாரன் அங்கதன் ஹனு மாஞேடு இலங்காபுரி சென்று இராவணேசுவரனுடன் யுத் தம்செய்து அவனைபங்கம் செய்ய, இராவணன் கோபித்து அங் கதனைச் சந்தரகாசத்திஞலே இரண்டாகத் துண்டிக்க வாலி சுதன் இரண்டாய்த் துண்டுபட்டு விழுந்தனன். அதைக் கண்ட அனுமான் இரண்டு துண்டுகளையும் கொண்டுவந்து ஸ்ரீராமபிரான் எதிரில் போட்டு துக்கமுடையவஞகி யிருக்க ஸ்ரீராமரும் சந்தபந்தமென்கிற மருந்தை அரைத்துப் பூச அத் துண்டங்கள் இரண்டும் ஒன்ருய்ப் பற்றி ஜீவன் வந்து பழைய அங்கதஞஞெனன்று உங்கள்புராணத்தில் கூறப்பட்டில்லை யோ? அதுவுமன்றி மற்ஞெரு புராணத்தில் மழைக்காலத்தில் மேகஇடி முழங்க அந்த இடி சப்தத்திஞலே ஒரு ஸ்திரீக்குக் கர்ப்பமுண்டாகி நவமாதஞ் சென்றபின் ஒரு ஆண் சிரசைப் பெற அவ்வுடலில்லாத அந்த சிரசானது பிறந்தவுடன் மாதாவைக் கடிப்பதும் அங்கு மிங்கும் குதிப்பதும் தாண் டித் தாண்டி ஓடுவதும் ஆகிய விநோதச் செய்கைகள் செய் தது. இதைக்கண்ட ஜனங்கள் அதற்குத் ததிமுகன் என்று பெயரிட்டு அழைக்க சில நாள் சென்றபின் தீர்த்தயாத்

திரையாய்ச் சென்ற அகஸ்திய முனிவரைத் ததிமுகனென்ற அந்தத்தலைபார்த்துத் தன் வீட்டிற்கு விருந்துக்கு அழைத்தது. அதற்கு அகஸ்தியர் "கலியாண மாகாதவர் வீட்டில் நான் விருந்துண்ணுவதில்லை ஆகையால் நீ ஒரு ஸ்திரீயை கலியாணம் செய்துகொண்டு வா" என்றனர். இதைக்கேட்ட ததிமுகன் தன் தாயினிடத்தில் வந்து "எனக்குக் கலியாணமாகாவிடில் நம்வீடு தானத்திற்கு உரியதாகாதாம், ஆகையால் எனக்கு விவாகம் செய்துவை" என்றனன்.

தாயார் தன்னிடத்திலுள்ள திரவியத்தை யெல்லாம் செலவழித்து ஒரு பெண்ணை தன் மகனாகிய தலைக்கு மணம் செய்து வைத்தனள். இப்படி சில நாட்கள் சென்றபின் ஒரு நாள் ததிமுகன் தன் மனைவியை அழைத்து ஒரு காவடி கட்டச்சொல்லி ஒரு பக்கத்துக் கூடையில் தானும் மற்றொரு பக்கக்கூடையில் சமையற்சாமான்களையும் வைத்து அதைத் தோளில் தூக்கிக்கொண்டு ஊர் ஊராக பிச்சை வாங்கி பிழைக்கப்போகும்படி கட்டளை யிட்டனன், அவளும் அவ்வாறே காவடி கட்டித் ததிமுகனையும் சாமான்களையும் தூக்கிக்கொண்டு ஒரு ஊர்போய்ச் சேர்ந்தாள். அக்காவடியை ஓரிடத்தில் வைத்துத் ததிமுகனைக் காவலாக்கி பிச்சைக்குச் சென்றனள். அபபொழுது அவ்விடத்தில் சிலர் சூதாடிக்கொண்டிருந்தனர். அச்சூதாட்டத்தினால் ஒருவருக்கொருவர் சண்டையுண்டாகி ஒருவருக்கொருவர் வெட்டிக்கொண்டனர். அவ்வாறு வெட்டுண்ட உடல்களில் ஒன்று துள்ளி விழும்போது ததிமுகன் பேரில் பட அந்தத் தலையும் வெட்டுண்ட உடலும் ஒன்றாய் ஒட்டிக்கொண்டது. ததிமுகன் உடலைப்பெற்று சந்தோஷமாக உட்கார்ந்துகொண்டிருக்கும்போது, மனைவி பிச்சை வாங்கிக்கொண்டு காவடியை நோக்கி

வருகையில் தன் நாயகன் உடலோடு கூடி உட்கார்ந்திருப் பதைக் கண்டு சந்தோஷித்து பிரம்மா விஷ்ணு ருத்திரன் மூவருமே நம்மைக் கண் திறந்து பார்த்துக் கருணை புரிந்தா ரென்று களித்திருந்தாள். உடலுக் குரியவள் வந்துபார்த்து இவன் என்னுடைய நாயகனென்று இழுத்தனள். தலைக் குரியவள் தன் நாயகனென்று இழுத்தனள். இருவரும் சண்டையிட்டுக்கொண்டு நியாயாதிபதியிடம் போக, அவ ரும் சிரசுக்குரியவளே அனுபவிக்க வேண்டுமென்று தீர்மா னித்தனன், என்கின்ற கதை உங்கள் புராணத்தில்லில்லையோ? அய்யா! பார்ப்பனர்களே! உங்கள் பாட்டன்மார்கள் புளுகி வைத்த இப்படிப்பட்ட புளுகுகளைவிடவா, நாங்கள் பெரிய புளுகு புளுகிவிட்டோம் இதைக்காட்டிலும் பெரிய புளுகு ஒன்று உலகிலிருக்கப்போகின்றதா? இன்னும் மற்றொரு அண்டப்புளுகையும் கேளுங்கள்.

மஹாபாரதத்திலே உக்கிரசேனன் திந்திரபிராட்சசன் சிரசை அறுத்து கருடனை அழைத்து இந்த சிரசை நிலத் தில் விடாமல் ஆகாயத்தே திரியென கட்டளையிட அவ்வாறே கருடனும் சிரசைத் தூக்கிக்கொண்டு சுற்றிக்கொண்டிருக்க திந்திரபியினுடைய சரீரம் பீமசேனனுடைய மனைவியாகிய இடும்பையினுடைய கர்ப்பத்துள் ஜன்மித்து, நவமாத பரி பூரணமாகி முண்டமாய்ப் பிறக்க அந்த உடற்கட்டையை மயானத்தில் எறிந்தனர். அச் சமயத்தில் ஆகாயத்திலே கரு டனால் தூக்கிக்கொண்டு சுற்றிய திந்திரபியினுடைய சிரசா னது கீழே கிடக்கும் முண்டத்தைக் கண்டு ஆவலாக கருட னையும் இழுத்துக் கொண்டு உடலில் வந்து ஒட்டிக்கொண்டு உயிர் பெற்று எழுந்தது. உடனே கருடன் பார்த்து பயந்து ஓடிவிட, இந்த சிரசும் உடலும் ஒன்றாகி, மனிதனாகி, தாயா கிய இடும்பையினிடத்தில் வர, அவள் ஆச்சரியப்பட்டு நீர்

யார் என்று கேட்டனள. அதற்கு அவன் தன் விருத்தாந்தத்தைச் சொல்ல, சந்தோஷப்பட்டு கடோற்கஜன் என்று நாமமிட்டனள் என்றும், ஈஸ்வரன் இச்செய்தியைக் கேட்டு கருடனை கடோற்கஜனுக்கு துவஜமாகி இரு என்று உத்தரவு கொடுத்ததாகவும், அதனாலேயே கடோற்கஜனுக்கு கருடத்துவஜனென்று பெயருண்டாயிற்றென்றும் கூறப்பட்டிருக்கின்றதே இதை எந்த அக்கப்போரில் சேர்ப்பது? ஒரு பவத்து சிரசும் மற்றொரு பவத்து முண்டமும் ஒன்றாய் ஒட்டிக்கொள்ளும்போது ஒரே பவத்தில் எங்கள் தலையும் உடலும் ஒட்டிக்கொள்ளாதா? அதுவுமன்றி,

ஆதியில் க்ஷத்திரியன் ஒருவன் உமைதேவனைப் பிரார்த்தித்து திவ்யபிண்டம் ஸ்தாபித்து தன்னுடைய மனைவிமார் இருவருக்கும் இரண்டாய்ப் பங்கிட்டுக்கொடுத்தனன். அவர்கள் இருவரும் அதைச் சாப்பிட்டு கற்பமுண்டாகி நவமாத பரிபூரணமாகி அரை அரை சரீரமாகப் பெற்றார்கள். உடனே அந்த இரண்டு அரைக் குழந்தைகளையும் ஜரை யென்னும் தாதியினிடத்தில் கொடுத்து குப்பையில் எறிந்துவிடும்படி ஏவினர். அவளும் அவைகளை எடுத்துக் கொண்டுபோய் இரண்டையும் ஒன்றாய்ச் சேர்த்துப் பார்த்தாள். உடனே இரண்டும் ஒன்றாய் ஒட்டிக்கொண்டு உயிர் பெற்றது. அதற்கே ஜராசந்தனென்ற பெயருண்டாயிற்று அவனே பீமனுடன் யுத்தம் செய்கையில் பீமன் அவனை இரண்டாய்க் கிழித்து எறிய இரண்டும் ஒன்றாய் ஒட்டிக்கொண்டு பீமனோடு யுத்தம் செய்தது என்பதாக உங்கள் மஹா பாரதத்தில் கூறப்பட்டிருக்கிறதே! இதை ஒப்பிட்டுப்பார்க்கையில் எங்களைப் பொய்யரென்று கூற உங்கள் நாக்குத்துணியுமோ? உங்கள் வாய் திறவுமோ?" என்று கேட்டான்.

இதைக்கேட்ட விப்ரர்கள் வெட்கித் தலைகுனிந்து நிற்க, மகாஜனங்களெல்லாம் கலகலவென்று கைகொட்டிச்சிரித்தனர். உடனே விப்ரர்கள் ஹே! வேடதாரிகளே! இதுவரையில் நீங்கள் கூறியவைகள் எங்கள் மத புராணத்தில் கூறப்பட்டிருப்பது பொய்யோ மெய்யோ? கிடக்கட்டும் உங்கள் சரீரம் கீழே கிடக்க சிரசு விருட்சமேறி பழம் சாப்பிட கீழே கிடக்கும் வயிறு நிரம்பியது எங்கள் புராணத்திலுண்டா? இந்தப் பொய்யை மூட்டை என்றே கூறவேண்டும் என்றனர். அதற்கு மனோவேகன் "ஐயா விப்ரர்களே!

கூயோனி ஜாநாம் மதுமத்ய மாம்ஸம்
கதம் நமம்நந்து தயா பரேஷாம்
கல்யாண கம்ஜாகாதாரம்ஸ—ே பாக்யம்
ஸர்வம் முதம் போக விஸ்திதாஞம்
கதமதமர்யா விதிதப்ராணீய
கதம் நமர்யாபி தரப்ஸ திப்ராம்
தாம்ஸாம்ப்ர பேதப்ரபு ஜாஸ்தி ஜம்தும்
நித்ரவ்ய மால்யாத்ரக்ஷ—ன நககாம
ஸயோஜ்யமாயம்தி புரணேபும்ஸாம்
யோகஸ்திதாஸ்தி தரப்ரபுத்தா
தவசித் பவேத் திவ்யமநுஷ்ய பாவம் நதம்
த்ரிர உதாபி சிதம்ந புக்த ஸ்தலசர ஜலசர
கசரபந்து பக்ஷ பாயசம்கெள.

—என்றபடி

இறந்துபோன மாதா பிதாக்களுக்கு அவர்களது குமாரர்களை மாளைய பக்ஷ திதி என்றும், மற்ற வருஷாந்திர திதி யென்றும் கூறி, கள்ளினாலும், மாமிசத்தினாலும், பால்சோற்றினாலும், நெய் சோற்றினாலும், வஸ்திரங்களினாலும் பிராமணர்களைச்சந் தோஷிக்கச்செய்தால், இறந்து சாம்பலானபித்ருக்கள் திருப்தி

அடைகிறார்களென்று கூறி அவர்களை ஏமாற்றி ஜீவனம்செய்து வருகின்றீர்களே! அது ஏமாற்றலா? உண்மையா? உண்மையாயின் எக்காலத்திலோ இறந்தவருக்கு எங்கேயோ இருக்கும் இன்னொருவர் சாப்பிட்டுத்திருப்தி அடைகிறதென்றால், ஒரே பவத்தில் ஒரேமனிதனுடைய சிரசு விருட்சத்திலுள்ள பழத்தினை சாப்பிட கீழேயுள்ள வயிறு திருப்தியடையாதா! கூறுங்கள்" என்றனன். உடனே விப்ரர்கள் ஒன்றும் கூறாமல் மௌனமுற்றிருக்க, ஜனங்கள் கைகொட்டிநகைத்து இனிமேல் இந்த புராணக்கதைகளைக் கேட்டு ஏமாறக் கூடாதென்று ஞானம் பெற்று இளைஞர் இருவருக்கும் ஜெயவாதிகளென்று பட்டம் கொடுத்து வீடு போய்ச் சேர்ந்தனர்.

---

## ஆறும் நாள்.

---

இந்த ஐந்து நாளாக பாடலீபுரத்தில் உள்ள ஜனங்கள் புராணக்கதைகளெல்லாம் ஆபாசமும்இயற்கைக்குவிரோதமும் நிறைந்த பொய்க் கதைகளென்று பேசிக்கொண்டும் சிரித்துப் பரிகாசம் செய்துகொண்டும் இருந்தார்கள். ஆறும் நாள் மனோவேகன் வாயுவேகன் என்ற இரு இளைஞர்களும் வேடரூபம் தாங்கிக் கையில் வில்லும் தடியும் பிடித்துக்கொண்டும் இடுப்பில் கச்சை கட்டிக்கொண்டும் மனோவேகன் ஒரு பூனையைத் தன் தோளில் வைத்துக்கொண்டும் பாடலீபுர பிரம்மாலயத்தில் புகுந்து பறையபடி பேரிகை கொட்டி சிம்மாசனத்தில் ஏறினார்கள். அந்த சப்தங் கேட்டு விப்பிரர்களும்பொதுஜனங்களும் ஏராளமாக வந்து கூடி அந்த வேடர்களைப் பார்த்து ஆச்சரியமுற்று நின்றார்கள்.

அப்பொழுது பிராமணர்கள் அந்த வேடர்களைப் பார்த்து "நீங்கள் யார்? பேரிகை கொட்டவேண்டிய காரண

மென்ன? இழிபிறப்பாளராகிய நீங்கள் இந்த சிம்மாசனத்தில் பயமின்றி உட்கார்ந்து கொண்டிருக்கின்றீர்களே! இது தகுமா! உமக்கு எங்களை வாதத்தில் வெல்லும் சாமர்த்திய மிருப்பின் வென்றுவிட்டு ஆசனத்தில் அமருங்கள். இல்லாவிடில் இறங்கி வெளியே போய்விடுங்கள்" என்று கூறினர். உடனே அவ்விருவரும் சிம்மாதனத்தை விட்டெழுந்து "ஓ பிராமணர்களே! எங்களுக்கு இவ்விடத்து சட்ட திட்டங்கள் தெரியாது! யாங்கள் இந்தப் பூனையை விற்பதற்காக இந்நகரத்துள் வந்தோம். வந்தவிடத்து இந்த ஆலயத்து விநோதங்களைப் பார்த்துக் கொண்டிருக்கையில் வேடிக்கைக்காக பேரிகை கொட்டினோம். எங்களுடைய நற்காலத்தால் நகரத்திலுள்ள எல்லா ஜனங்களும் ஒருங்கே இங்கு வந்து சேர்ந்தீர்கள். ஆகையால் இந்தப் பூனையை வேண்டியவர்கள் விலைகொடுத்து வாங்கிக்கொள்ளுங்கள்" என்றான்.

உடனே ஜனங்களெல்லோரும் நகைத்தார்கள். அப்பொழுது விப்பிரர்கள் "இதனுடைய கிரயம் என்ன? இதனிடத்தில் என்ன அதிசயமுள்ளது?" என்று கேட்டனர். அதற்கு மனோவேகன் இஃது "கிரதகசஞ்சார துவாதக சஹஸ்ரகரம்" என்றனன். உடனே கூட்டத்திலுள்ளவர்கள் அதன் அருத்தம் என்னவென்று கூச்சலிட்டனர். "இந்தப்பூனைராஜனிருக்கும் இடத்திலிருந்து சுற்றிலும் பதினன்கு யோசனை தூரம் எலிகள் எட்டிப்பாராது அவ்வளவு சாமர்த்தியம் நிறைந்த பூனையாகும் இது" என்று மனோவேகன் கூறினன். இதைக் கேட்ட ஜனங்களும் விப்பிரர்களும் அவ்வளவு சாமர்த்தியமானதா வென்று அந்தப் பூனையின் சர்வ அங்கங்களையும் அதிசயமாகப் பார்த்தார்கள். அப்பொழுது அதனுடைய காதில் ஒன்று கொஞ்சம் சேதமாகி

இரத்தம் கசிந்துகொண்டிருப்பதைக் கண்ட விப்பிரர்கள் "இது என்ன விந்தை! பெரும் சாமர்த்தியமுள்ள இப்பூனை ராஜனுக்குக் காதறுபட்டுக்கிடக்கின்றதே! காரணம் என்ன?" என, ஒரு சுண்டெலி தன்னுடைய எலிராஜனிடத்தில் பூனை ராஜனுடைய காதைக் கடித்துவிட்டு வருகிறேனென்று சபதம் செய்துகொண்டு வந்து இந்தப் பூனை அயர்ந்திருக்கும் வேளையில் காதைக் கடித்துவிட்டு ஓடிப் போயிற்று. இதனாற்றான் இதற்குக் காது பின்னமாயிற்று என்றான். இதைக் கேட்ட பொது ஜனங்களும் விப்பிரர்களும் நகைத்தார்கள். அதற்கு மனோவேகன் "ஏன் நகைக்கின்றீர்கள்? என்று கேட்டான், அதற்கு விப்ரர்கள் "சாதாரண பூனையை எலிகடிப்பது முடியாத காரியம். அப்படியிருக்க இவ்வளவு பெரிய சாமாத்தியமுள்ள பூனையை ஒரு சுண்டெலி கடித்துவிட்டது என்றால் இது அண்டப் புளுகாய் இருக்கிறதே என்றனர். உடனே மனோவேகன் "ஐயா விப்பிரர்களே! நீங்கள் போதித்துவரும் புராணத்தில் வீரமும், தீரமும் நற்குணமும் நிறைந்த ஒருவரிடத்தில் சில அவகுணங்களையும் காட்டி எழுதப்பட்டில்லையா? கூறுங்கள்" என்று சொல்ல விப்பிரர்கள் அவ்வாறு இருப்பின் ஏதாகிலும் ஒன்று கூறுங்களென்று வினவ மனோவேகன் சொல்லுகிறான். "ஒரு பிராமணர் வீட்டில் மாளயபட்சத்திற்கு அநேக தத்வஞானராகிய பிரபூதிகள் வந்திருக்கையில், மாண்டவ்ய ரிஷியும் அவ்விடத்தில் வந்தார். அவரைக் கண்டு பூதிக பிராமணர்களெல்லாம் கோபித்துக்கொண்டு எழுந்திருந்து போய்விட்டனர். உடனே அவ்வீட்டு எஜமானன் பயந்தவனாகி அப்பிராமணர்கள் பின்னே ஓடியான் என்ன பிழைசெய்தேன். எதற்காக என் இல்லத்தை விட்டு வந்துவிட்டீர்கள் என்று வினயமாகக்கூறி திரும்பி

வரும்படி அழைத்தனன். அதற்கு அப்பிராமணர்கள் எங்கள் பந்தியில் மாண்டவ்யன் வந்துவிட்டான், அவன் பாவியாகையால் அவன் முன்னிலையில் நாங்கள் போஜனம் செய்யமாட்டோம் ஆதலால் நாங்கள் வந்துவிட்டோம்" என்றனர்.

இதைக்கேட்டுக் கொண்டிருந்த மாண்டவ்யன் அப்பிராமணர்களைப் பார்த்து நான் என்ன பாவம் செய்தேன், என்னிடத்தில் என்ன தோஷம் உளது என்று கேட்டான். அப்பொழுது பிராமணர்கள்,

"அபுத்ரயை சஸ்ய கதிர்நாஸ்தி ஸ்வர்க்கே நைவசனாநவச
தஸ்யாத் புத்ரகேந்தஷ்ய பஞ்சாயத்பவது பிக்ஷு"

என்ற ஸ்லோகப்படி, புத்திரனில்லாதவனுக்கு மோட்சமில்லையாகையால், புத்திரனில்லாத நீர் எங்கள் பந்திக்கு யோக்கியரல்ல வாகையால், நீர் ஒரு விவாகம் செய்துகொண்டு புத்திரனைப்பெற்றுக்கொண்டீரானால் பந்தியில் இருக்க அருகதை உடையவராவீர் என்றனர். மாண்டவ்யன் மனசஞ்சலமுடையவனாகி "ஐயா விப்பிரர்களே! என்னுடைய சிரசோ நரைத்துவிட்டது. கண்களோ பாதாளஞ் சென்றுவிட்டன. பற்களெல்லாம் போய்விட்டன. என் உடலெல்லாம் பாம்புத்தோல் உரித்தாற்போல் சுருங்கியிருக்கின்றது. என்னுடைய முதுகோ கூனடைந்துவிட்டது. உதிரமில்லாத உடலாகயிருக்கின்றது. இத்தகைய விருத்தாப்பியனாகிய எனக்கு யார் பெண் கொடுப்பார்கள்? பெற்றோர்கள் சம்மதிப்பினும் எந்தப்பெண் சம்மதிப்பாள்" என்று கேட்க அதற்கு அந்த பிராமணர்கள்,

"நஷ்டேம்ரதே பரிவாஜிதேக் விவேசபதிதேபதன"
என்ற சுலோகத்தை முழுதும் சொல்லி இந்தவேத வாக்கியப்

படி விவாகம் செய்துகொள்" என்று கூறி இரக்க முள்ளவர்களாகி அப் பிராமணரெல்லோரும் பெண் தேட எங்கும் அலைந்து கிடைக்காமல் கடைசியாக மாண்டவ்யனுடைய சகோதரியாகிய டிண்டிகை என்ற பெயருடைய ஒரு விதவையை மணஞ்செய்வித்தார்கள். மாண்டவ்யனும் அவளை உள்ளன்போடு மணந்து இஷ்டவிஷயகாம போகங்களை அனுபவித்து நாளடைவில் ஒரு புத்ரியைப்பெற்றார்கள். அப்பெண்ணும் சௌந்தரிய ரூபவதியாக யௌவனமாகி இருக்கையில் மாண்டவ்யனும் டிண்டிகையும் யாத்திரை போக எண்ணங்கொண்டு தன் புத்ரியை எங்கு விட்டுப் போவதென்று சிந்தித்திருக்கையில், டிண்டிகை "பரமேஸ்வரனிடத்தில் விட்டுப்போகலாம். அவரும், பார்வதியும் நம்முடைய புத்திரியை நாம் திரும்பி வரும்வரை காப்பாற்றிக் கொடுப்பார்கள்" என்று பகர்ந்தனள். இவ்வார்த்தையைக் கேட்டு மாண்டவ்யன் கலகலவென்று நகைத்து ஐயோ இது "பாலுக்குப் பூனையைக் காவல்வைத்தல் போலதாகும். பரமேஸ்வரன் பெருங் காமபைத்தியங்கொண்டவன், முன்னொருகாலத்தில் அவன் தேவலோகத்தில் தேவசபையில் நிர்வாணத்தோடு காமவெறியனாகித் திரிகையில் தேவர்களால் தண்டிக்கப்பட்டு ஒரு நாள் தேவாரண்யத்திற்குப் போய் அமிருத ரஸபலங்களினால் அகங்காரமாகி அவனுக்கு இந்திரியமொழுகி ஆறாய்ப்பெருகிற்று. அந்த நதியில்தான் ஸ்ரீகள் முதலாக முப்பத்துமுக்கோடி தேவஸ்திரீகள் உற்பத்தியானார்கள். அம்மாது சிரோன்மணிகளை சிவன் சுர சமூகங்களுக்குக்கொடுத்துத் தானும் அனுபவித்துக்கொண்டிருந்தான். அச்சமயம் பிரம்மாவுக்கு மாமிசத்தின்பேரில் இச்சையுண்டாக அதைப் புசித்தால் சகல தேவர்களும் உத்தம மனிதர்களும் ஏசுவார்களென்று அதற்கு உபாயமாக நரையாகம், கள்யா

கம், அஸ்வயாகம், கோயாகம், பௌண்டிரிய யாகமுதலாகிய பலயாகங்களையும் உண்டாக்கி அதற்கு பெருமைகள் பல தந்து சகல ஜனங்களையும் வஞ்சித்து தான் சொன்ன வாக்கியமே வேத வாக்கியமென்று போதித்து தன்னை சுயம்புவென்று பிரசித்தமாகச் செய்துகொண்டனன். அதற்காக அநேக சூத்திரங்களைச் செய்து யாகம் செய்ய ஆரம்பித்து சகல தேவர்களையும் தங்கள் தங்கள் மாதர்களுடன் வரும்படி கட்டளையிட்டு அனைவரும் வந்து கூடி யாக மண்டபத்திலிருக்கும் போது பரமேஸ்வரன் பார்வதியுடனே உத்ஸாகத்தோடு ககன மார்க்கமாக நர்த்தனஞ் செய்துகொண்டு வருகையில், பார்வதியுடைய கன்னத்திலும், கண்டத்திலும் மற்ற விடங்களிலும் இருக்கும் லீலா வடையாளங்களைக்கண்டு தேவர்கள் நகைக்க இதைப்பார்த்த பிரம்மா லஜ்ஜிதனாகி,

"வித்யாவித்தவிஹீ நஞ்ச சூத்ரகர்ம்ணோபஜீவிந:
தேஸந்தி தூஷகா ஸ்ரார்த்தேநாம் அங்கஹீனோம்
சுணாதித:"

என்று ஸ்லோகமொன்று சொன்னான். இச்சுலோகத்தைக் கேட்டமாத்திரத்தில் பார்வதி கோபமுடையவளாய் பிதாவாகிய பிரம்மா இவ்வாறு கூறலாமாவென்று தன் நாக்கைப் பிடுங்கி பிரம்மாவின் பேரில் எறிந்துவிட்டு, அங்கிருந்த யாக குண்டத்தில் விழுந்து உருகிப் பஸ்பமாய்விட்டாள். அதைக் கண்டு ஈஸ்வரன் துக்கமும் கோபமும் உடையவனாய் ஓமகுண்டத்திலே யிருக்கிற அக்கினியை யெல்லாம் வாரிஇறைத்து சரீரத்திலும் அப்பிக்கொண்டு அந்த பஸ்பத்தையும் பார்வதியினுடைய எலும்புகளையும் சரீர, சிர, கர, அங்கமெல்லாந் தரித்துக்கொண்டு பரியாகாச வேஷரூபனாகி ஹோஸதி மஹாஸதி முதலிய ஆக்ரோஸதமசெய்தனன். இவ்வாறு

அழுதும், புரண்டும் நாலாதிக்குகளிலேயும் பார்த்துப்பார்த்து ஈஸ்வரன் காமாக்கினியில்முழ்கி தன்னுரு தனக்குத் தெரியாமல் சர்வசுகத்தையும் விட்டு ஒருவரையும் பாராமல் திசை தெரியாமல் கண்கெட்டு வாய்விட்டு பிதற்றிய பைத்தியக்காரனுகி தேவாரண்யம் புகுந்து ஒரு புதருக்குள்ளே போய்யொழிந்தனன். இதை மன்மதன் கண்டு பரிகசிக்க அங்கிருந்து தபஸர் வசிக்கும் இடத்தில் போய்ச்சேர்ந்தனன். அங்குள்ள தபசரில் சிலர் இக்கோலத்தைக்கண்டு பேயோ பிசாசோ, மூர்க்கனே துராசாரனே, காமியோ வென்றும், சிலர் உக்கிர தபசியோ, ஈஸ்வரன் தானே ஸ்வர்க்காபவர்க்கனே என்றும் பேசிக்கொண்டு நின்றார்கள்" என்றான்.

பரமேஸ்வரனுடைய அயோக்கியதையைக் கேட்டதும் டிண்டிகை "அப்படியானல் பிரம்மாவினிடத்திலாவது நம்முடைய கன்னிகையை வைத்து விட்டுப் போவோம்" எனவும், மாண்டவ்யன் நகைத்து "பிரம்மா மாத்திரம் வெகு யோக்கியனே? பிரம்மாண்ட புராணத்தில் பத்மை நிமித்தியம் ஏற்பட்டகதையை கேட்டறியாயோ? பார்வதியினுடைய விவாகத்தில் பிரம்மா புரோகிதனுக யிருந்து விவாக ஓமம் செய்தனன். அப்பொழுது ஓம குண்டத்தை பிரதக்ஷணம் வருகையில் பார்வதியினுடைய நவரத்தின திவ்விய ஆபரண அலங்காரங்களையும் மெல்லிய பட்டினல் அலங்காரமாய் நெய்யப்பட்ட வஸ்திரங்களையும், சரீரங்களில் பூசப்பட்ட சந்தன கற்பூர மந்தார பாரிஜாத குசுமம் முதலியவைகளின் பரிமளத்தினலும் அவள் தன்னுடைய இடது கையினல் கீழ் முந்தாணியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு அன்னம் போன்று நடந்து வருகையில் அவளுடைய தொடையையும் கண்டு மோகித்து பிரம்மாவுக்கு இந்திரியம் ஸ்கலிதமாயிற்று. அந்த இந்திரி

யத்தை ஓம குண்டத்தைச் சுற்றியிருக்கும் ஒரு கலசத்தில் விட்டனன். அதில் அகஸ்திபன் பிறந்தான்.

மறுபடியும் பிரம்மாவுக்கு அவளுடைய தொடையழகைக் காணக்காண இந்திரியம் ஸ்கலித மாயிற்று. அதை விருக்ஷ பச்சைமுதலாகிய அநேகசெடிகளின் மேல் விட வாலகில்லியாதி முதலிய அநேக ரிஷிகள் உற்பவித்தார்கள். இவைகளைக் கண்ட பிர்ம்மா வெட்க முடையவனாகிப் போகையில் அங்கே ஒரு புற்றைக் கண்டு அதில் கொஞ்சம் இந்திரியத்தை விட அதில் வால்மீகி ரிஷி பிறந்தனன். அவ்விடம் விட்டுப் போய் அங்கு ஒரு சுடலை சாம்பலில் இந்திரியத்தை விட அதில் பூரிச் சிரவனென்கிற இராக்ஷசன் பிறந்தான். பிறகு அவ்விடத்திலுள்ள எலும்புகளைப் பொருக்கி ஒன்றாகச் சேர்த்து அதிலே இந்திரியத்தை விட சல்லியனென்கிற பராகக்கிரமசாலி பிறந்தான். பிறகு பிரம்மா அவ்விடத்தை விட்டுப் போய்க்கொண்டிருக்கையில் சிறிது இந்திரியம் ஸ்கலிதமாகி கீழே விழ, அதை ஒரு பக்ஷி புசித்து அதன் வயிற்றில் சகுனி பிறந்தான். பிறகு தடாகத்திலே கொஞ்சம் விட அதை ஒரு மண்டூகம் புசித்து அதன் வயிற்றில் மண்டோதரி யென்கிற பெண் பிறந்தாள். மிகுந்த இந்திரியததை அக்குளத்திலுள்ள தாமரைப் பூவிலே விட அதிலே பத்மை யென்கிற புத்திரி பிறந்தாள். அவளுடைய ரூப சௌந்தரியாலங்காரத்தைக் கண்டு மோகித்து அவளுடைய கையைப்பிடித்துத் தன்னைக் கூடும்படி கேட்டனன். அப் பெண் திடுக்கிட்டு "ஐயோ! நீர் தந்தையாயிற்றே, இது தகுமா" என்று மறுத்தனள். அதைக் கேட்ட பிரம்மா "புத்திரார்த்த நிமித்தம் தாயோடேயாகிலும், தமக்கையோடாகிலும், மகளோடேயாகிலும் பின்னை யாரோடாகிலும் கூடிப் புணரலாமென்றிருக்கும்,

"மாதரமுபைத்ய, கஸாரமுபைதி, புத்ரார்திக,
சகாமார்த்திநா புத்திரலோகோ நாஸ்திதத்
ஸர்வம்பரவோ, விந்துஹுஹ, தஸ்மாத் புத்ரார்த்தம்
மாதரம், ஸ்வரஞ்சாதி, ரோஹதி:

என்ற வேத வாக்கியத்தை யுணராயோ" என்று கூறினன். அதைக்கேட்ட பத்மை சம்மதிக்க பிரம்மாவானவன் அவள் மோகவலையில் சிக்கி காம சுகம் அனுபவித்து விளையாடி களித்திருக்கும் அக்கிரமங்களை சகல தேவர்களும் அறிந்து பிரம்மாவை துஷ்டனென்றும், அம்போஜகர்மன்; நிக்சவ்ஷ்டன் என்றும் வைது, கந்தர்வரை அழைத்து பிரம்மாவினுடைய அக்கிரம போகத்தை அழித்து வரவேண்டுமென்று அனுப்பினர். உடனே கந்தர்வர் அவன் உறங்குஞ் சமயத்தில் போய் பலவித சங்கீத வாத்தியங்களுடன் பாடி எழுப்பி பின் அவனுக்கு மானம் உண்டாகும்படியான கீதங்கள் பல பாடக்கேட்ட பிரம்மா வெட்கங்கொண்டு பத்மையை கர்ப்பத்தோடு விட்டுவிட்டுச் சென்றால் அபவாதமாகு மென்றஞ்சித் தனது லிங்கத்தினாலே பத்மையின் கர்ப்பத்திலுள்ள இந்திரியத்தை உறிஞ்சினான். அவ்வாறு உறிஞ்சுகையில் அது அண்டத்தில் வந்து நிரம்பிப் பெருகியது. அதுவே உலகத்தில் அண்டவாதமென்ற பெயருண்டாயிற்று. தவிர மறுபடியும் மன்மதவிகாரம் பிரம்மாவுக்கு அதிகமாகி தேவலோகத்திலுள்ள ரம்பை மேனகை முதலிய தேவ மாதரை யடைய நினைத்து தபஸு செய்ய ஆரம்பித்தனன். இதைக் கண்ட தேவர் இவன் தபம் முற்றுப் பெற்றதாயின் காம விகாரத்தால் கெடுதல் நேருமென்று இந்திரன் ஆக்கினைபால் திலோத்தமை சென்று அவனுடைய மூன்றரைக்கோடி தபசையும் தன்னுடைய ஆடல் பாடல்களாலே கெடுத்ததுமன்றி, நான்கு பக்கமும் ஆடி நான்கு தலைகளை உண்டாக்கி ஆகா

யத்தில் பறக்கும்போது மத்தியில் ஐந்தாவது தலையையும் உண்டாக்கிக்கொண்டு தன்னை பின்தொடர்ந்து வரும்படி பிரம்மாவைச் செய்தனள். அவ்வாறே பிரம்மன் தபங் கெட்டு காமாக்கினியால் சுற்றி வருகையில். ஈஸ்வரன் பிரம் மாவின் ஐந்து தலைகளில் ஒரு தலையை அறுத்தெறிந்தான் அதனாலே பிரம்மாவுக்கு வெட்க முண்டாகி காடுகளில் அலைந்துவருகையில் அங்கொரு புதரிலிருந்த பெண் கரடியைக் கூட அதன் வயிற்றில் ஜாம்புவர்தனென்ற கரடி முகமோடு கூடிய ஓர் புத்திரன் பிறந்தான். அங்கிருந்து புறப்பட்டு ஊர் வசி யென்கிற வேசியினிடத்தில் சில உடன்படிக்கை செய்து கொண்டு முன் பத்மையினிடத்தில் ஆக்ரஷணஞ் செய்து அண்டத்துள்ளிருக்கிற இந்திரியத்தை ஊர்வசி கர்ப்பத்தில் விட, அதில் வசிஷ்டன் ஜென்மித்தான். அப் புத்திரனுக்கு தன் பதவியைக் கொடுத்துவிட்டு பிரம்மா தபோவனமடைந் தான். பிறகு வசிஷ்டன் சகல சாஸ்திரங்களிலும், சகல தத் துவங்களிலும் சாமர்த்தியனாகி புகழோடு வாழுங் காலத்தில் ஒரு நாள் பிராமணர்களைக் கண்டு வந்தனை செய்ய; அதற்குப் பதில் வந்தனை பிராமணர்கள் செய்யாதிருந்தார்கள். அதைக் கண்டு வசிஷ்டன் பிராமணர்களை நோக்கி தனக்குப் பதில் வந்தனை செய்யாததின் காரணமென்னவென்று கேட்ட னன். அதற்குப் பிராமணர்கள் "நீ வேசிப் புத்திரன்; ஆகையால் பிராமணர்கள் உனக்கு வந்தனை செய்யமாட் டார்கள்" எனக் கூறினர். இவ் வார்த்தையைக் கேட்டதும் வசிஷ்டன் வெட்கித் தலை குனிந்தவனாக அவ் விடத்தை விட்டுச் சென்று ஒரு மலை ஓரத்தில் தபசு செய்ய ஆரம்பித் தான். இவ்வாறு பல நாளாக தவம் செய்து வருகையில் ஒரு நாள் மாலினி என்ற சண்டாள ஸ்திரீ தனியாக வருவ தைக் கண்டு மோகித்து அவளோடு கூடி புணர்ந்தனன்.

அவளுடைய கர்ப்பத்திலேதான் பராஸரர் ஜன்மித்தது. அவன் தன் பிதாவைப்போல் பர்வத ஓரத்தில் சென்று உக்ரோக்ர தபசு செய்துகொண்டிருந்து ஒரு நாள் தேச சஞ்சாரியாக புறப்பட்டுவருகையில் கங்கையை வந்தடைந்தனன். அங்கு மச்சவாணியின் புத்திரி மச்சகந்தி என்பவளைக் கண்டு மோகித்து அவளோடு கூடி சுகமனுபவித்து வருகையில் அவளுடைய வயிற்றில் வியாஸன் பிறந்தனன். அந்த வியாஸன் மாதாவாகிய மச்சகந்தி பிறகு சந்தனுமகாராஜனை மணந்து சித்ராங்கதன் சித்ரவீரியன் என்னும் இரண்டு பிள்ளைகளைப் பெற்றனள். அந்த சித்ராங்கதன் சித்ரவீரியன் தங்கள் மனைவிகளாகிய அம்பாலை, அம்பிகையென்னும் கன்னிகைகளுடன் கூடி வாழ்ந்துவருகையில் சில நாளில் இறந்துவிட்டார்கள். அவர்களுக்கு புத்திர சந்தானம் இல்லாததினால் மச்சகந்தியானவள் பராஸரனுக்குப் பிறந்த தன் மூத்தகுமாரனாகிய வியாசனை சந்தனுமகாராஜனுக்குப் பிறந்த தன் புத்திரிகளும் வியாஸனுக்குத் தங்கைகளுமாகிய அம்பாலை, அம்பிகை என்னும் இருவருடனும் கூடி சுகமனுபவிக்கச்செய்து, திருதராஷ்டிரன் பாண்டு என்னும் இரு புத்திரர்களைப் பெறச்செய்து சந்தான விர்த்தி உண்டாக்கினான். அண்ணனும் தங்கையும் கூடியதும் புத்திரியைப் புணர்வதுமாகிய ஆபாசங்கள் இந்த பிரம்மாவினால் நடந்ததினால், இத்தகைய அவிவேகியும் அனாச்சாரனும் காமுகனுமாகிய பிரம்மாவினிடத்தில் நம்முடைய கன்னிகையை வைத்துவிட்டுப்போவது யோக்கியமல்ல"

என்று மாண்டவ்யன் கூறினன். இதைக் கேட்டடிண்டிகை பிரம்மாவினுடைய யோக்கியதைக்குப் பயந்தவளாகி வெறுப்புற்று "அப்படியானால் நமது புத்திரியை ஸ்ரீயப்பதியாகிய நாராயணனிடத்திலாவது வைத்து

"விட்டுப் போவோ" மென்றாள். இதைக் கேட்ட மாண் டவ்யன் சிரித்து, "ஆகா! நாராயணனுடைய யோக்கி யதையோ இவர்களிருவரைக் காட்டிலும் பதின்மடங்கு அதிகமேயொழிய அவர்களுக்கு இவன் இளைத்தவனல்ல" என்று அவனுடைய போக்யதையைப்பற்றி கூற ஆரம் பித்தான்.

"ஸ்ரீயப்பதியாகிய நாராயணன் கிருஷ்ணாவதாரத்தில் துவாரகாபுரியில் பதினாறாயிரம் கோபிகா ஸ்திரீகளுடனே கூடியும் ராஜமதி சந்திரமதி என்னும் இரு பெண்களோடும் சுகமனு பவித்தும் காலங்கழித்துவரும் காமுகனிடத்தில் நம்மு டைய மகளை வைத்தால் சும்மா விடமாட்டான். ஆகை யால் அவ்விடம் தகாது" என்றனன். அதற்கு டிண்டிகை "சந்திரனிடத்தில் வைப்போ" மென்றனள். "அவனும் யோக் கியனல்லன்; அவன் விஸ்வாமித்திரனுடைய மனைவியைக் கண்டு மோகித்து அவளை அழைத்துக்கொண்டுபோய் கூடும் வேளையில் புருஷன் வந்து விட்டனன். புருடன் வருவதைக் கண்ட அவள் சந்திரனைப் பூனையாக உருமாற்றினாள். அதை அறிந்த விஸ்வாமித்திரன் கோபித்து சர்மாசனத்திலே ப்ரகரி ப்ப அது அவன் வாசஸ்தலத்துக்குள்பட அதனாலே கள காந்தன் என்று பேருண்டாயிற்று. சந்திரனுக்கு ரோகிணி முதலாகிய அநேக ஸ்திரீகள் இருந்தும் தவபத்தினியை கற் பழித்தவன் நம்முடைய கன்னிகையைக் கண்டால் விடு வானோ" என்றனன். "அப்படியானால், தேவேந்திரனிடத் திலாவது வைத்துவிட்டுப்போவோம்" என்று டிண்டிகை கூறி னள். அதையும் மாண்டவ்யன் மறுத்து "தேவேந்திரனும் அயோக்கியனே! எப்படியெனில் கௌதமனென்கிற முனி நாதனுடைய மனைவி அகல்யை என்பவளை வசியம் செய்து கொண்டு அவளோடு கூடி சுகமனுபவித்திருக்கையில்

கௌதமர் கண்டு கோபித்து "ஹே! தேவேந்திரா! நீ ஒரு யோனிக்கு ஆசைப்பட்டாய்; உன்சரீர மெல்லாம் ஆயிரம் யோனிகளாக மாறக் கடவது" என்று சபித்தனன். அவ் வாறே அவனுடைய தேகமெல்லாம் ஆயிரம் யோனிகளாக மாறிவிட்டது. அதைக் கண்டு தேவேந்திரன் வெட்கி தலை குனிந்து உயிர் தப்பி ஓடிவிட்டனன். அத்தகைய அயோக் கியனிடத்திலா நம் பெண்ணை வைத்துவிட்டு போவது. கூட வேகூடாது" என்றனன்.

இதைக் கேட்ட டிண்டிகை "சூரியனிடத்தில் வைத்து விட்டுப் போவோ" மென்றனள். அதற்கு மாண்டவ்யன் சூரியன், பாண்டுவினுடைய மனைவியாகிய குந்தியின்மேல் கா முற்று அவளோடே கூடியிருந்தனன். ஆகையால் அவனும் யோக்கியனல்லன்" என்றனன். "அப்படியானால் எமனிடத் தில் வைப்போம்" என்றனள். அதற்கு மாண்டவ்யன் சந்தோ ஷித்து, "அது நமக்கு தகுந்த இடந்தான். எமனோ பால பிரமசாரி. சகல தூஷண விதூரன்; சத்தியவான்" என்று கூறி தன் மகளை அழைத்துக்கொண்டு டிண்டிகையுடன் எமபுரம் சென்றான். மாண்டவ்யன் எமராஜனைக் கண்டு தன்னுடைய விருத்தாந்தமெல்லாம் எமனுடன் கூறி தன் கன்னிகையை அவனிடத்தில் ஒப்பித்துவிட்டு தன் மனைவி யுடன் யாத்திரைக்குச் சென்றுவிட்டான். இவ்வாறு இரண் டொருநாள் சென்றபின் எமன் அந்தப் பெண்ணினுடைய ரூபலாவண்ய சௌந்தரியத்தைக் கண்டு மோகித்து அவ ளைத் தன் வசப்படுத்திக்கொண்டு சுகமனுபவித்து வந்தனன். இவ்விஷயம் உலகமறியாவண்ணம் செய்ய, எமனானவன் அப்பெண்ணை பகல் முழுமையும் தன் வயிற்றிலே விழுங்கி வைத்துக்கொண்டு, இரவில் உமிழ்ந்து அவளுடன் கூடி காமபோகம்அனுபவித்து வந்தனன். இவ்வாறுதினந்தோறும்

நடந்து வருகையில் ஒரு நாள் எமராஜன் கங்கா ஸ்நானத்திற்குப் போயிருந்தனன். அப்பொழுது வயிற்றிலே யிருந்த அக்கன்னிகையை வெளியே உமிழ்ந்து கங்கைக் கரையிலுள்ள ஒரு மண்டபத்தில் வைத்துவிட்டு கங்கையிலிறங்கி ஸ்நானம் செய்தனன்.

இக்கோலத்தைக் கண்ட அக்கினிதேவன் அப்பெண்ணைக் கண்டு மோகங் கொண்டவனாகி வாயு பகவானை அழைத்து "இந்தப் பெண்ணை எனக்கு வசியம் செய்து கொடுப்பாயா?" என்றனன். அதற்கு வாயு பகவான் "ஐயோ! எமராஜன் வெகு பராக்கிரமசாலி; அவனுடைய ஸ்திரீயைக் கொண்டுவர முடியாது. அது உனக்கு வேண்டா" மென்றனன். அதைக் கேட்ட அக்கினி "ஹே வாயுவே! மன்மத பாணம் என் மாரைத் துளைக்கின்றது; எவ்வாறாயினும் எனக்கு இம்மண்டபத்திலேயே அவளைக் கூட்டிவைக்க வேண்டு" மென்றனன். உடனே வாயு பகவானும் மந்தமாருதம் வீசி அவளுக்கு சந்தோஷத்தை உண்டாக்கி அக்கினிபகவானுக்கு இப்பெண்ணை கூட்டிக்கொடுக்க இருவரும் அம்மண்டபத்திலேயே கூடி சந்தோஷித்தார்கள். இவ்வாறு அப்பெண் அக்கினியுடன் கூடியிருக்கையில் எமன் வந்துகொண்டிருந்தான். அவன் வருகையைக் கண்ட அப்பெண் அக்கினி பகவானை வயிற்றுக்குள்ளே விழுங்கி விட்டாள். எமனும் வந்து அக்கன்னிகையைத தூக்கி தன்னுடைய வயிற்றுக்குள் விழுங்கிக் கொண்டு எமபுரம் சென்று விட்டனன். அவ்விடத்தில் எமனுடைய வயிற்றிலே அக்கினியும் அக்கன்னிகையும் பகலெல்லாம் கூடி களித்திருப்பார்கள். இரவில் எமனுடன் அப்பெண் கூடியிருப்பாள். இவ்வாறு நடந்து வருகையில் உலகத்திலே அன்று முதல் அக்கினியில்லாமல் போய்விட்டது. உடனே

பிராமணர்களுக்கு ஓமாதிக்கிரமங்கள் கெட்டு மூன்று லோகமும் சகல தேவர்களும் சந்தேகித்து பயந்தவர்களாகி வாயு பகவானை அழைத்து "உன்னுடைய சிநேகிதனை அக்கினி எங்கே?" என்றனர். அதற்கு "வாயு அவன் சென்றவிடம் எனக்குத் தெரியாது" என்றனன்.

உடனே தேவர்கள் கோபித்து "அவன் எங்கிருந்தாலும் கொண்டுவர வேண்டு"மென்று கட்டளையிட வாயு பகவான் ஓர் யுக்தி செய்தனன். அதாவது தன்னுடைய மனையில் சகல தேவர்களுக்கும் விருந்து நடத்த ஏற்பாடு செய்து அவ்வாறே எல்லா தேவர்களுக்கும் அழைப்புக் கடிதம் அனுப்பினன். அதைக் கண்ட தேவர்களெல்லாம் குறிப்பிட்ட நாளில் விருந்துக்கு வந்து சேர்ந்தனர். வாயு பகவானும் சந்தோஷமாக எல்லோரையும் வரவேற்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இலை பரப்பி எமராஜன் பக்கத்தில் மாத்திரம் இரண்டு இலைகள் அதிகமாக வைத்தனன். அதைக் கண்ட எமன் உள்ளே திடுக்கிட்டு "ஹே வாயுவே! எனக்கு மாத்திரம் மூன்று இலை ஏன்?" என்றனன்.

உடனே வாயு நகைத்து "உன்னுடைய வயிற்றிலிருக்கிற கன்னிகையை கீழே கக்கு;" என்றனன். எமராஜன் ஒன்றும் பேச முடியாதவனாகி வெட்கி அவ்வாறே தன் வாயிலிருந்து ஒரு பெண்ணை உமிழ்ந்தனன். அப் பெண்ணைப் பார்த்து வாயு "ஹே கன்னிகையே! உன் வயிற்றிலொளித்து வைத்திருக்கின்ற அக்கினி பகவானைக் கக்கு;" என்றனன். இவ் வார்த்தையைக் கேட்ட அக் கன்னிகை தன் யோக்கியதையை எமன் அறிந்து என் செய்வானோவென்று நடு நடுங்கி வயிற்றிலிருந்த அக்கினியைக் கக்கும் வேளையில் அவளு

டைய முகத்திலிருந்த தாடி மீசைகளெல்லாம் நடுக்கத்தால் உதறவே அக்னி பட்டு பொசுங்கி விட்டன. அன்று முத லாகவே பெண்களுக்குத் தாடி மீசை இல்லாமல் போய்விட் டது. இவ்வாறு அக்னி வெளி வருவதைக் கண்ட எமராஜன் கோபமுடையவனாய் தன் கை தண்டாயுதத்தால் அடிக்க அக் னி பயந்து ஓடி சகல சராசரங்களிலேயும் ஒளித்துக்கொண் டனன் என்று உங்கள் மதப்புராணம் கூறுகின்றதா இல் லையா" வென்று மனோவேகன் கேட்டான். அப்பொழுது பிராமணர்கள் "உண்டுதான்" என்றனர், "ஆனல் மகா புருஷர்கள் லோக கர்த்தாக்கள் தேவாதி தேவர்கள் என்ற மும்மூர்த்திகள் முதலான தேவர்களின் செய்கைகள் இத் தகைய இழி தன்மையை யுடையதாயிருந்தும் நீங்கள் பெரி யார்களென்று போற்றிப் புகழும்போது எங்கள் வீரமுள்ள பூனைக்கு சிறிது சண்டெலியால் காதறுந்தால் அதை ஏள னஞ் செய்கின்றீர்களே! இது நியாயமா?" என்றனன்.

இதைக்கேட்ட ஜனங்கள் கைதட்டி நகைத்து "இந்த தேவர்களின் யோக்கியதைகளை விட உங்கள் பூனையே மேலா னது. நீங்கள் சொல்லும் கிரையத்திற்கு மேலும் அப்பூனைக் குக் கொடுக்கலாம்" என்று கூறி புராணங்களின் அபாசத் தையும், மும்மூர்த்திகள், சூரியன், சந்திரன், தேவேந்திரன், எமன், அக்கினி முதலானவர்களின் அயோக்கியத் தனத்தையும் யிகழ்ந்து பேசிக்கொண்டு, இவ்விருவருக்கும் ஜெயவாதிகளென்ற பட்டமுங் கொடுத்து சிம்மாதனமேற்றி வாழ்த்தி வணங்கி வீடுபோய்ச் சேர்ந்தார்கள். பிராமணர் களும் தங்கள் புராணங்களின் புரட்டுகள் வெளியாகி தாங் கள் தோல்வியுற்றதற்கு வெட்கி வெளியேகினார்கள்.

## ஏழாம் நாள்

இன்று மகா சமர்த்தர்களும், உன்னத ஞானர்களும், உதார குணஸ்தர்களுமான மனோவேகன், வாயுவேகன் என்ற இரு சுயமரியாதை வீரர்களும் பௌத்த சந்நியாசி வேடம்பூண்டு மூன்று லோகமும் புகழத்தக்க சம்பிரமத்தோடு கூடி பாடலீபுர பட்டணத்து தட்சண கோபுர வழியாக பிரம்மாலயம் புகுந்து பேரிகைகொட்டி சிம்மாதனத்தில் வீற்றிருந்தார்கள். பேரிகை சப்தம் கேட்டதும் நகரத்துப் பொது ஜனங்களும் விப்ர ஜனங்களும் பரபரப்பாக வந்து சேர்ந்தார்கள். விப்பிரர்கள் அந்த பௌத்த சந்நியாசிகளைக் கண்டு "ஹே சந்நியாசிகளே! எங்களை வாதத்தில் வெல்லாமல் சிம்மாதனத்தில் வீற்றிருப்பது இவ்விடத்து நீதிக்கு விரோதமாகும். ஆகையால், கீழே யிறங்கி எங்களுடன் வாதம் செய்ய வல்லவரானால் வாதியுங்கள்; இல்லாவிடில் வெளியேறுங்கள்" என்றனர்.

உடனே மனோவேகன் எழுந்து, "உங்களுடன் வாதம் செய்தே போகின்றோம்" என்றனன். இதைக் கேட்ட விப்பிரர்கள் கோபக் குறிப்புடன், "உங்களுக்குக் குரு யார்? உங்களுடைய தபத்திற்குக் காரணம் என்ன?" என்று கேட்டனர். கஜரேசனான மனோவேகன் புன்னகை கொண்டு "எங்களுக்குக் குருவு இல்லை எங்கள் தவத்திற்கு நாங்களே காரணம்" என்று கூறினான். அதைக்கேட்ட விப்பிரர்கள் "குருவில்லாத தவமும், அரசனில்லாத தேசமும், சந்திரனில்லாத இரவும், சூரியனில்லாத பகலும், யானையில்லாத சேனையும் உலகத்தில் பிரகாசிக்காதது போல உங்களுடைய தவமும் பிரகாசிக்காதாயினும் உங்களுடைய தவத்தின் காரணம் கூறுங்கள்" என்றனர்.

உடனே மனோவேகன் எழுந்து, "உங்கள் சபையில் சுத்த பூதி போன்ற மூடர்களிருப்பின் நாங்கள் சொல்வதில் பயனில்லை ஆதலால் சொல்ல பயப்படுவோம்" என்றனன். அதைக்கேட்ட விப்பிரர்கள் "சுத்த பூதிஎன்றால் யார்? அவர்களது வரலாறுகளைக்கூறும் பார்க்கலா" மென்று கேட்க, மனோவேகன் சொல்லுகிறான். "அங்கிரதேசத்தில் ஆசுரமென்ற பட்டணத்தில் மகா மூர்க்கன் சுத்தபூதி யென்பவன் இருந்தான். அவன் ஒருநாள் கடினமான பலகாரத்தைப் பல்லினால் மென்று தின்றுகொண்டிருக்கும்போது நாக்கைக் கடித்துக் கொண்டான். அதனால் நோய் அதிகரித்துப் பல்லின்பேரில் கோபங்கொண்டு நாக்கைக் கடித்த பற்களிரண்டைப்பிடுங்கி கையில் வைத்துக்கொண்டு மற்றப் பற்களுக்கு உடைந்த பற்களைக் காட்டி, "ஹே பற்களே! நீங்கள் என் நாக்கைக் கடித்தீர்களானால் இந்த கதியைத் தான் அடைவீர்கள்; இது சத்தியம்." என்று கூறிக் கொண்டிருந்தானும். இம்மாதிரி தன் சுகத்திற்குக் கேடு வருவதையே கவனியாமல் தன் சுகத்திற்குத் தானே விரோதியாகி குணாகுண மறியாத பேதைகள் உங்கள் சபையில் இருப்பின் சொல்லி பயனென்ன? என்றனன். இதைக்கேட்ட விப்பிரர்களும் பொது ஜனங்களும் நகைத்து "அத்தகைய மூடர்கள் எங்கள் சபையில் யாருமில்லை; நீங்கள் பயப்படாமல் கூறலா" மென்றனர்.

உடனே வாயுவேகன். "அத்தியாசத்தனென்னப்பட்டவன் போன்றவர்கள் உங்கள் சபையிலிருந்தால் சொல்ல முடியாது" என்றனன். விப்பிரர்கள் "அந்தக்கதை எப்படி?" என்று கேட்கவாயுவேகன் சொல்லுகிறான். "ஜம்பூத் வீபத்து தேவானியென்ற சாமந்த கிராமத்தில் ஒருகிராமணி யிருந்தான். அவனுக்கு சௌந்தரியென்ற மூத்தமனைவியும், குரங்கியென்ற இளைய மனைவியுமாய் இருவர் இருந்தனர். அவ

னுக்கு இளைய மனைவி பேரில் அதிக விஸ்வாசம். தன்னுடைய மனதை அவளிடம் செலுத்துவது போலவே தன்னுடைய ஐஸ்வரியாதிகளையும் அவளிடமே ஒப்புவித்திருந்தான். இவ்வாறிருக்கும்போது அக் கிராமணி யாத்திரையாக வெளியூர் பிரயாணஞ் சென்றுவிட்டான். அச்சமயம் இளைய மனைவி குரங்கி சோர நாயகனுடன் களித்திருந்தாள். யாத்திரையாகச் சென்றிருந்த கிராமணி திரும்பி வருகையில் தன்னுடைய மூத்த மனைவியின் பந்துக்களை வழியில் சந்தித்து எல்லாருமாய் மூத்த மனைவியின் கிரகம் சென்று ஆகாரம் உண்டனர். அப்போஜனத்தை எல்லாரும் விரும்பி யுண்டார்கள். ஆனால் கிராமணி மாத்திரம் வெறுப்புற்று ஒரு ஆளை அழைத்து குரங்கியினிடஞ் சென்று அவள் கையால் சமைத்துவைத்துள்ள ஆகாரத்தை வாங்கி வரக்கட்டளையிட்டான். அவனும் அவளைக்கண்டு போஜனம் கேட்க, புருடன் தன் வீட்டிற்கு நேராக வராததால் கோபமுற்று சாணத்தைக் கோமயத்தில் கரைத்து ஒரு வெள்ளிப்பாத்திரத்தில் ஊற்றி வாய் மூடி அனுப்பினாள். அதை அவ்வேலைக்காரன் அப்பந்தியில் எஜமானாகிய கிராமணியிடங்கொடுத்தான். அவன் அதை ஆவலுடன் திறந்து அதைப்பாயாசமென்று நினைத்துக் குடித்தான். உடனே சந்தோஷித்து "இளையாளுடைய போஜனமே போஜனம்; அவளுடைய கை தெய்வீகக் கையோ? என்ன அருமையாய் சமைத்திருக்கிறாள்? தேவாமிர்தத்திற்கொப்பாகும்" என்று சொல்லிக்கொண்டே குடித்தான். அது சாணம் என்று எல்லாருங் கண்டு நகைத்தும், மூக்கைப் பிடித்துக்கொண்டும், வாந்தியெடுப்பவருமாய் எழுந்துவிட்டனர். அப்பொழுதும் அதை மகிழ்ந்து குடித்தான். இப்படிப்பட்ட ஒருதலை பட்சமுள்ளவர்களாய் மானம் போயினும் தான் கொண்ட கொள்கை

யில்—நம்பிக்கையில் பற்றுக்கொண்டவரிருப்பின் யார்தான் சொல்லுவார்கள்" என்றான். இதைக் கேட்ட பொது ஜனங்கள் சரியான கதைகளாயும் காரணக்கதைகளாயு மிருக்கின்றனவென ஆச்சர்யமுற்றனர். விப்பிரர்கள் "அந்த கையவர்கள் இச்சபையில் யாருமில்லை; பயமின்றி கூறுங்கள்" என்றனர்.

உடனே! மனோவேகன் எழுந்து, "நாங்கள் யார் என்றால் கர்மபுரநகரத்தில் பிரசித்தமானமதுபிந்துரன் என்கிறஒரு செட்டி, பௌத்த பக்தனயிருந்தார். அவருடைய குமாரர்களாக நாங்கள் பிறந்தோம். அவர் எங்களை பௌத்த சந்நியாசிக ளிடம் வித்தை கற்க அனுப்பியிருந்தார். அவ்வாறே நாங்க ளும் கற்றுவருகையில் திடீரென்று ஒருநாள் நல்ல மழை பெய்து வெள்ளம் சமுத்திரம்போல் திரண்டு வந்தது. அவ் வெள்ளத்தால் அந்தப் பிரதேசமெல்லாம் அடித்துக்கொண்டு மூழ்கிவிட்டது. எங்கள் துரதிர்ஷ்டத்தால் எங்கள் குருவும் வெள்ளத்தில் போய்விட்டார். நாங்களிருவரும் அங்குள்ள ஒரு பெரிய மலையின்மேல் ஏறிக்கொண்டோம். அதே சம யத்தில் இரண்டு நரிகள் ஓடிவந்து மலையை இழுத்துக் கொண்டு அவ்வெள்ளத்தினின்றும் 12 யோசனை தூரத்துக் கப்பால் கொண்டுவந்துவிட்டது. அப்பொழுது எங்கள் கையில் எங்கள் குருவின் வஸ்திரங்களும் லாஞ்சனங்களும் இருந்ததால் அதை நாங்கள் உடுத்திக்கொண்டு மலையை விட் டிறங்கி பௌத்த சந்நியாசிகளாகி யாத்திரை செய்து கொண்டு இவ்விடம் வந்தோம்" என்றார்கள்.

இதைக் கேட்ட விப்பிரர்கள் நகைத்து, "ஹே பௌத்த சந்யாசிகளே! நன்றாயிருக்கிறது. உங்கள் வேஷத்துக் கேற்ற பேசசா பேசுகிறீர்கள்? ஒரு மலையை இரண்டு நரி

கள் இழுத்துக்கொண்டு வெகு சீக்கிரமாக 12 யோசனை தூரம் சென்றது என்று பச்சைப் பொய் பேசுகிறீர்களே. இதுதான் உங்கள் மதக் கொள்கையோ" யென்றார்கள். இதைக் கேட்ட மனோவேகன், "ஹேபிராமணர்களே! நாங்கள் சொல்லுவது பச்சைப்பொய்யென்று கூறுகின்றீர்களே; உங்கள் ராமாயணத்தில் சீதா தேவியை இராவணனிடத்திலிருந்து மீட்டுவர ஸ்ரீராமன் கபிளுகனை அழைத்து இலங்கைக்கு சேது பந்தனங் கட்ட கட்டளையிட, அவ்வாறே வானரங்கள் மலைகளைத் தூக்கிவரவும், கபிளுகன் அவைகளை ஒரு கையால் வாங்கி மற்றொருகையால் அடுக்கிக்கொண்டும், பெரிதாயிருந்தால் அவைகளைத் துண்டாக்கிக் கட்டினார்களென்றும் கூறுகின்றனவே; இதுமாத்திரம் உண்மையா? பூலோதனங்களான வானரங்கள் பர்வதங்களை எடுக்கும்போது சக்தி நிறைந்த ஜம்புகங்கள் மலைகளை இழுத்துக்கொண்டு போகக்கூடாதா? பிராமணர்களே! நகைத்தீர்களே! இதற்கு பதில் கூறுங்கள்" என்றான்.

உடனே பொது ஜனங்கள் கைதட்டி நகைத்து "சரி சரி ரொம்பசரி சம்பூர்ணமாக இராமாயணத்தில்இந்தக்கதை இருக்கின்றது" என்றார்கள். உடனே விப்பிரர்கள் இவர்களை "ஜெயவாதிக"ளென்று கூறிவிட்டுச் சென்றார்கள். ஜனங்களும் ஜய பேரிகை கொட்டி இவ்விளைஞர்களைசிம்மாதனத்திலேற்றிஜெய பட்ட மளித்தார்கள். பிறகு ஜனங்கள் வீடு திரும்பும்போது "அவ்விளைஞர்கள் முதலில் கூறிய கதையிரண்டையும் அனுசரித்தால் நாம் உடனே இந்தப் பொய்யும் ஆபாசமுமான கதைகளை நம்பாமல் விட வேண்டியதுதான். அதற்காகவே அவர்கள் சரியான சவுக்கடி போன்ற கதைகளை முன்னதாகவே கட்டி சொன்னார்கள். இதை அந்த பிராமணர்

கள் கவனித்தால் அவர்கள் இன்றே அப்புராணங்களை விட்டு விட வேண்டும்" என்று பேசிக்கொண்டார்கள்.

குறிப்பு:—இதில் கூறிய இரண்டு கதைகளைப்போலவே வெவ்வேறான கதைகள் முன் வந்த கதைகளிலும் உண்டு.

## எட்டாம் நாள்

லட்சுமி வாசனும், சத்ய சொரூபனும், சாகித்திய விநோதனும், சகல கலா வல்லவனுமான மனோவேகன் தன் தோழனாகிய வாயு வேகனுடன் ஜைன முனிவர் (சமண முனிவர்) வேடம் பூண்டு பாடலீபுர நகரத்தில் பிரவேசித்து அங்கு பிரசித்தமாயுள்ள பிரம்மாலயத்திற் சென்று பேரிகை கொட்டி சிம்மாதனத்தில் வீற்றிருந்தார்கள். பேரிகை சப்தங்கேட்டு விப்பிரர்களும் பொது ஜனங்களும் ஏராளமாகவந்து கூடிவிட்டார்கள். விப்பிரர்கள் அவ்விரு முனிவர்களையுங் கண்டு "தாங்கள் தயவுசெய்து சிம்மாசனத்தை விட்டு இறங்கி இந்த ஆசனத்தில் அமருங்கள். எங்களை வாதத்தில் வென்ற பின் தங்களுக்கு அச்சிம்மாதன முரியதேயன்றி அதற்குமுன் அதில் அமருவது வழக்கமல்ல" வென்று கேட்டுக்கொண்டனர். உடனே போலி வேடதாரிகளான அவ்விரு முனிவர்களும் வேறாசனத்தில் அமர்ந்தார்கள். உடனே விப்பிரர்கள் எழுந்து, "ஹே! முனிவர்களே நீங்கள் இவ்வாறு தவவேடம் பூணக்காரணமாயிருந்த விரக்தி யாது?" என்று கேட்டனர்.

மனோவேகனும் புன்னகையுடன் எழுந்து "எங்கள் தவத்திற்குக் காரண மென்ன வெனில், நாங்கள் வத்ஸ தேசத்தில் கௌசாம்பி என்னும் நகரத்தரசனான சந்தி

சேகர ராஜனின் குமாரர்கள். எங்கள் தாயார் மிருகாவதி. மற்றும் எங்களுடன் பிறந்த சகோதரர்களான அந்தகன், விரஷபன், விமலன் என்று மூவரிருக்கின்றனர். இவ்வாறு நாங்கள் ராஜவைபவத்திலிருக்கும்போது எங்கள் தகப்பனார் மேகம் கூடி கலைவதைக்கண்டு விரக்தியாகி எங்களில் இளையவனான விமலனுக்குப் பட்டங்கட்டி விட்டு தீட்சை பெற்றுக்கொண்டு தவவனம் போய்விட்டார். உடனே நாங்கள் நம் தந்தை மூத்த பிள்ளைகளிருக்க இளைய பிள்ளைக்குப் பட்டம் சூட்டினாரே என்று கோபங்கொண்டு அதுவே விரக்தியாகி எமதரனென்ற ரிஷி ஆசிரமத்தில் சேர்ந்து நாங்களிருவரும் தீட்சையைப் பெற்றுக் கொண்டு சகல சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்து அங்க, வங்க, கலிங்க, கொங்க, தெலுங்க, மதங்க ஜ்யோனக, வாட, லாட, சேர, சோழ, நேபாள, பாஞ்சால, பங்காள, வராள முதலிய தேயங்களெல்லாம் சென்று சஞ்சரித்து பல உத்தண்ட வாதிகளை மனகர்வ முறித்து வருகையில், பாடலீ புரத்தின் மகிமையையும் இங்குள்ள வாத வல்லவர்களின் திறமையையுங் கேள்விப்பட்டு இங்கு வந்தோம்" என்று கூறி முடித்தான். இதைக் கேட்ட விப்பிரர்கள், "சரி, சரி; இவர்கள் வாதம் பண்ணவே நேராகவந்திருக்கின்றார்கள்." என்று தெரிந்து; "ஹே ரிஷிகளே! நீங்கள் கடவுளை ஜினனென்றும், சர்வக்ஞனென்றுங் கூறுகின்றீர்கள். அவர் ஆக்கல், அழித்தல், காத்தல் என்ற முக்குணமுமில்லாத சர்வக்ஞவரென்றும், அவரே உலகுக்கு இறைவனென்றுங் கூறுகின்றீர்கள். அரி, அரன், அயன் மூவரும் கடவுள்களல்லவா? அவர்கள் சர்வக்ஞராயிற்றே; அவர்களை நீங்கள் கடவுள்கள் அல்ல என்று மறுக்கலாமா?" என்றனர். "ஐயா விப்பிரர்களே! இம் மும்மூர்த்திகளையும் சர்வக்ஞரென்று சொல்ல உங்கள் மதப் புராணங்களிடம்

கொடுக்கின்றனவா? முழுதும் வாசித்துப் பார்த்தீர்களா?" என்றனன். இவ்வார்த்தையைக் கேட்ட விப்பிரர்கள் "எங்கள் புராணம் இதற்கு விரோதமாக என்ன கூறுகின்றது? தயவு செய்து விவரியுங்கள் பார்ப்போம்" என்றனர். மனோவேகன் புன்முறுவல் கொண்டு "உங்கள் சபையில் கபிலனென்றவனைப் போன்ற ஆட்களிருப்பின் நாங்கள் அதைச் சொல்லுவதில் பயனில்லை" என்றான். விப்பிரர்கள் "அந்தக் கதை எப்படி?" என்று கேட்க, மனோவேகன் சொல்லுகின்றான். "மதுரை என்ற பட்டணத்தில் காளதரன் என்ற ஒரு அரசனிருந்தான். அவன் ஒரு நாள் தன் வீட்டிலிருந்து ஒரு முக்கியமான வேலையைக் கருதிப் புறப்படுகையில், அவனுடைய புத்திரன் கபிலன்என்ற நான்குவருடத்திய பையன் தும்மினான். அத்தும்பலால் தன் காரியத்திற்கு இடையூறுண்டாகுமென்று கோபித்து அக்குழந்தையின் நாசியை அறுத்து விட்டான். மூக்கறுந்த அந்தக் குழந்தையை அதன் தாயார் பல சிகிச்சைகளால் இரணத்தை ஆற்றி வளர்த்து வந்தாள். இவ்வாறு 10 வயதாகி வளர்ந்து வரும் அம் மூக்கறையன் ஒருநாள் கடைத்தெருவு வழி சென்றான். அங்குள்ள கண்ணாடி கடையைக்கண்டு அவ்விடம் சென்று அக்கடையிலுள்ள ஒரு கண்ணாடியைக் கேட்க கடைக்காரன் உயர்ந்த கண்ணாடியைக் கொடுத்தான். அப்பையன் கண்ணாடியில் பார்க்கும்போது தனக்கு மூக்கில்லாமலிருந்தது. இதைக்கண்டு "ஹே கடைக்காரா! மூக்கில்லாத கண்ணாடியையா நான் கேட்டேன்? இது வேண்டாம்" என்று அதைத் தூக்கிக்கீழே போட்டு உடைத்தனன். கண்ணாடியை இழந்த கடைக்காரனும் அங்குள்ளவர்களும் நகைத்து "ஓ இளரவசே! உமக்குத்தான் மூக்கில்லை; கண்ணாடியில் யாதொரு குற்றமுமில்லை. ஆகை

யால் கடைக்காரனுக்கு உண்டாகிய நஷ்டத்தைக் கட்டிக் கொடுங்கள்'' என்றனர்; இவ்வாறு தன்னிடத்திலிருக்கும் குற்றத்தை உணராமல் களங்கமற்ற கண்ணாடியின் பேரில் குற்றங்கூறி உடைத்தவனைப் போன்றவர்கள் உங்கள் சபையிலிருந்தால் நாங்கள் சொல்லமாட்டோம்'' என்றனன்.

இதைக்கேட்ட விப்பிரர்கள் ''அத்தகைய மூடர்கள் எங்கள் சபையில் யாருமில்லை; நீங்கள் தாராளமாய் கூறுங்கள்.'' என்றனர். உடனே வாயுவேகன் எழுந்து ''உங்கள் சபையில்நியாயமறியா அரசனைப்போன்றவர் இருப்பின்சொல்லிப்பயனென்ன?'' என்று கூற, விப்பிரர்கள் ''அக்கதையையும் கூறுங்கள்'' என்றனர்.

உடனே வாயுவேகன் ''கௌசிகபுரமென்ற ஓர் பட்டணத்தில் ஒரு வீட்டில் திருடன் கன்னம் வைத்தான். அச்சமயம் அச்சுவரானது திடீரென்று இடிந்து திருடன் பேரில் விழ அதனால் அக்கள்ளன் இறந்து விட்டான். இவ்வரலாறு அரசன் கேள்விப்பட்டு அவ்வீட்டுக்குரியவனை அழைத்து ''இந்தத் திருடனின் மரணத்திற்கு உன் வீட்டுச் சுவரே காரணமாகையால் அதற்கு நீயே குற்றவாளியாவாய்'' யென்றான். அதைக்கேட்ட வீட்டுக்காரன், ''அரசே! நான் கொல்லத்துக்காரரைக் கொண்டுதான் சுவர் எழுப்பினேனே யொழிய நான் சுவர் கட்டவில்லை ஆதலால் அச்சுவர் விழுந்ததற்கு நான் பொருப்பாளி அல்ல'' வென்றான். உடனே அரசன் கொல்லத்துகாரனை வரவழைத்து, ''நீ சுவரை அழுத்தமாக வைக்காததால் சுவரிடிந்து ஆள் மாண்டான்; ஆகையில் உன் பேரில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது'' என்றான்.

கொல்லத்துக்காரன் பயந்து, 'ஐயோ நான் இந்த சுவர் வைத்துக்கொண்ருக்கும் போது அருகிலிருந்த தட்டான்

கடையில் ஒரு தாசி ஆடி பாடிக்கொண்டிருந்தாள். அவ்வாட்டத்தால் இந்த சுவற்றைக்கவனிக்கவில்லை ஆதலால் சுவர் சரியாய் கட்டப்படாததற்கு நான் பொருப்பாளி அல்ல' என்றான். அரசன் உடனே தாசியை அழைத்து தாசியின் பேரில் குற்றஞ்சாட்டி கூப்பிட்டு விசாரிக்கையில் அவள் 'என்பேரில் குற்றமில்லை. என் நகையை அந்தத் தட்டான் சீக்கிரம் கொடாததால் நான் அவர்கடையில் வந்து ஆடினேன். ஆகையால் அது தட்டானின் குற்றமே யொழிய யென் குற்றமல்ல' என்றனள். உடனே அரசனும் தட்டான்பேரில் குற்றஞ்சாட்டி கூப்பிட்டு விசாரித்தான். தட்டானும் பயந்தவனாகி 'அரசே! என்பேரில் யாதொரு பிழையும் இல்லை, நான் சவரன் வாங்கிவர சந்தைக்குப் போயிருந்தேன். அவ் விடத்தில் திருடர்கள் வந்து திடீரென்று என் கையிலிருந்த திரவியத்தைப் பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்கள். ஆகையால் நகை செய்ய நாள் அதிகமாயிற்றென்று சொல்லி தப்பித்துக்கொண்டான். உடனே அரசன் மந்திரியை யழைத்து திருடர்களைக் கண்டுபிடிக்கச்சொல்ல, மந்திரியும் சந்தையிலுள்ள எல்லாரையுங் கைதி செய்து அரசனிடத்தில் கொண்டுவந்துவிட்டு "இந்தக் கூட்டத்திற்குள் தான் அந்தத் திருடர்கள் இருக்கவேண்டும் ஆகையால் "இவர்களெல்லாரையும் கொன்றுவிட்டால் இதில் தட்டானிடமிருந்து திருடினவர்கள் கூட மாண்டுபோவார்கள்" என்றான். இதைக்கேட்டு அரசனும் அப்படியே செய்ய உடன்பட்டான் என்றகதையுண்டு. அத்தகைய மூட அரசனைப்போன்ற நீதியறியா மடையர்கள் உங்கள் சபையிலிருந்தால்சொல்ல முடியாது என்றனன். விப்பிரர்கள் நகைத்து, "இத்தகைய மூடர்களும் எங்கள் சபையில் இல்லை கூறுங்கள்" என்றனர்.

உடனே மனோவேகன் எழுந்து, நீங்கள் கடவுள் ' என்று சொல்லும் "ஈஸ்வரன் தாருகாவனத்திலுள்ள ஒரு ரிஷியின் பத்தினியைக் கண்டு மோகித்து நானாவிதத்தினால் அவளை மயக்கி மாறுவேடத்தோடு அவளுடன்கூடி சுகமனுபவித்து வந்தனன், இதனால் அந்த ஸ்திரீ தன் நாயகனாகிய ரிஷியினிடத்தில் முன்னிருந்த விருப்பங் காட்டாதிருந்தனள். அந்த ரிஷியும் தன் மனைவி தன்னிடத்தில் அன்பு குறைந்திருக்கின்றாளென்பதைத் தெரிந்து கொண்டு அவள் பேரில் சந்தேகம் பூண்டு ஒரு நாள் தான் வெளியே போவதாகவும், மாலைப் பொழுதிற்கு வருவதாகவும் கூறிவிட்டு வெளியே சென்றுவிட்டனன். உடனே ஈஸ்வரன் அங்கு வந்து, இருவரும் சந்தோஷ சாகரத்தில் மூழ்கியிருந்தார்கள். அச் சமயத்தில் சந்தேகப்பட்டு குட்டைக்கண்டு பிடிக்க வெளியே சென்ற ரிஷியும் உடனே திரும்பி ஆஸ்ரமத்தில் நுழைந்தான். அப்பொழுது, தன் மனைவியின் கோரச் செய்கையைக் கண்டு கோபித்து, அச் சோர நாயகனான ஈஸ்வரனைப் பார்த்து, "உன்னுடைய சிசுனம் அற்று விழக்கடவது" என்று சபித்தான். அச் சாபத்தால் ஈஸ்வரன் சிசுனம் அற்று கீழே விழுந்தது. ஈஸ்வரன் மகா கோபமுடையவனாகி, "இந்த சிசுனம் உன் நெற்றியில் ஒட்டிக்கொள்ளக்கடவது" என்று ரிஷிக்கு எதிர் சாபங் கொடுக்க, கீழே விழுந்த சிசுனம் துள்ளி எழும்பி அந்த ரிஷியின் நெற்றியில் ஒட்டிக்கொண்டது. இந்த அதிசயத்தைக் கண்ட ரிஷி, ஈஸ்வரனே இங்கு வந்தாரென்று ஞானத்தால் அறிந்து, அவர் பாதத்தில் விழுந்து, "ஏ! சுவாமி! நான் செய்தது தப்பிதமே என் பிழையைப் பொருத்தருள வேண்டும். என்பேரில் தயவு வைத்து என் நெற்றியில் ஒட்டிக்கொண்ட லிங்க

கத்தை விலகும்படி அருள்புரிய வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். ஈஸ்வரனும் புன்னகை கொண்டு "இக்கோலத்துடனே கைலாசகிரிக்கு வருவாயாக" என்று கட்டளையிட்டுச் சென்றனன். ரிஷியும் வெகு அவலுடன் தன் நெற்றியில் ஒட்டிக்கொண்டு தொங்கிக்கொண்டிருக்கும் சிசுனத்தைத் தன் கையினால் தூக்கிப் பிடிக்க, அது மேலும் மேலும் நீளமாக வளர்ந்து கீழே தொங்கிற்று. அம் மகிமையைக் கண்ட மற்றொரு ரிஷி ஓடிவந்து, அதிகமாக வளர்ந்த லிங்கத்தைத் தூக்கிப் பிடிக்க அதற்குமேலும் அது வளர்ந்து தொங்கலாயிற்று. இதைக்கண்ட தாருகாவனத்து ரிஷிகளெல்லோரும் வந்து தாங்கிப்பிடிக்க, அவ்வளவுக்கும் நீளமாக வளர்ந்து கடைசியில் கொஞ்சம் வளைந்து தொங்கிற்று, மறுபடியும் அதைத்தாங்க ரிஷிகளில்லாததால் அது தொங்கத் தொங்க அக் கூட்டத்தார் அதை யிழுத்துக்கொண்டு கைலாசகிரியைப் போய்ச் சேர்ந்தார்கள். இவ் வதிசயத்தைக் கண்டு பார்வதி விழுந்து விழுந்து நகைத்தாள், ஈஸ்வரனும் சந்தோஷித்து, ரிஷிகளே! கீழே விடுங்க"ளென்று கட்டளையிட அவ்வாறே விட்டனர்.

அந்த லிங்கத்தை ஈஸ்வரன் எடுத்து, பார்வதின் யோனியில் வைத்துக்கட்டி "இந்த அடையாளத்தை பூசைக்கு யோக்கியமாக்க பூலோகத்தில் வைத்து கும்பிடுவீர்களானால் உங்களுக்குச் சகல பாக்கியங்களும் சித்திக்கும் என்று அருள்புரிய, அது முதல் ரிஷிகளும் மற்றும் பலரும் அவ்வாறே பரம்பரையாய் அவ்வடையாளத்துக்கு லிங்க பூஜையென்று நாமங்கொடுத்து பூஜித்து வருவது யாவருமறிந்த விஷயந்தானே.

இதுவும் தவிர, ஆதியில் சராசரமெல்லாம் அழிந்து ஒன்றுமில்லாத ஒரு காலத்தில் ஆச்சரியமாக ஒரு சரீரம்

உண்டாயிற்று. அந்த சரீரம் ஒன்று இரண்டுதுண்டா யிற்று, இரண்டிலொன்று ஆகாயத்தில் போயிற்று. மற்றொன்று கீழேயே இறங்கிற்று, மேலே சென்ற துண்டில் சொர்க்கம் முதலாகிய லோகங்களுண்டாயின. கீழே இருந்ததில் பூமி சமுத்திரம் மலை முதலியவை களுண்டாயின. இவைகளிரண்டிற்கும் மத்தியில்தான் சதா சிவன் பிறந்தான். அவன் எட்டு திக்கும் நோக்குகையில் ஒருவரையும் காணமற் பிரமித்து தன் இடது தோளைப்பார்க்க அங்கே விஷ்ணு பிறந்தான். வலதுதோளை நோக்க அங்கே பிரம்மா பிறந்தான். இவ்வாறு இருவருந்தோன்றி ஸ்திரீ இல்லாமல் அநேக நாளிருந்தார்கள். பிறகு வரவர மூவருக் கும் காமாக்கினி பொருக்கமாட்டாமல் அவஸ்தையுற்றுக் கடைசியாக பிரம்மா ஒரு பெண் உருவம் செய்தான். அதற்கு விஷ்ணு உயிர் கொடுத்தான். உடனே அந்தப்பெண், நடக்கவும் பேசவும், ஆரம்பிக்கவே, சிவன் சேலைகொடுத்தான் இவ்வாறாக ஒரு பெண்ணை உற்பத்தி செய்தபிரம்மா 'எனக் கென்றும், உயிர்கொடுத்த விஷ்ணு 'எனக்'கென்றும் சிவன் 'நான் சேலை கொடுத்தேன், எனக்குத்தா, னென்றும் சண்டையிட ஆரம்பித்து அப் பெண்ணை மூவரும் பிடித்தி ழுத்துத் தொந்திரவு செய்தார்கள். ஒருவருக்கொருவர் விடாதிழுத்து முடியாமல் மூவரும் யுத்தம் செய்ய ஆரம்பி த்தார்கள். இக் கோலத்தைக கண்டு தேவர்கள் ஓடிவந்து அவர்களை விலக்கி 'என்ன அயோக்கியத்தனமான சண்டை யாயிருக்கிறது இது இப்படிச் செய்வது உங்களுக்குக் கௌ ரவமாகுமா?" என்று கடிந்தனர்.

உடனே மூவரும் தலைகுனிந்து "நீங்கள் எவ்வாறு தீர் மானிக்கின்றீர்களோ அவ்வாறே நாங்கள் சமாதானமாய் போய்விடுகின்றோம்' என்று கூறி நிற்க, தேவர்களும் நன்

ரூக ஆராய்ந்து 'உரு எழுதினவன் தந்தை, உயிர் கொடுத்த வன் தாய், உடைகொடுத்தவன் புருஷன்; ஆகையால் இப் பெண் சிவனுக்கே உரியவள், என்று தீர்மானித்து இப் பெ ண்ணை ஈஸ்வரனிடத்தில் ஒப்பித்துவிட்டு போய்விட்டார்கள், பிரம்மாவும் விஷ்ணுவும் ஒன்றும் பேச முடியாமல் திரும்பி விட்டார்கள். ஈஸ்வரன் அப் பெண்ணோடு கூடி இன்பம் அனுபவித்துக்கொண்டிருந்தான். இவ்வாறு சில நாள் செ ன்றதும் பிரம்மாவுக்கும் விஷ்ணுக்கும் மனம் பொறுக்க முடி யாமல் ஓடி வந்து அப் பெண்ணின் சேலையைப் பிடித்திழுத்து நிர்வாணமாக்கினார்கள். அதனால் அக் கன்னிகை வெட்கி கரைந்து கங்கை நதியாகப் போய் விட்டாள். அன்றுமுதல் தான் கங்காநதி உற்பத்தியாயிற்று'

பிறகு மூவரும் பெண்களில்லாமல் காமவெறியால் அவ ஸ்தைப்பட்டு உருவம் உற்பத்திசெய்யமூவரும் ஒருமனதா கிவும், பிரம்மா விஷ்ணு உயிர் கொடுக்கவும், ஈஸ்வரன் உடையளிக்கவுமாக அநேக ஸ்திரீகளை உற்பத்தி செ ய்து, காம சுக மனுபவித்தார்களென்றும் கூறப்பட்டி ருக்கிறது. ஆ! ஹா! என்ன கோரம். இப்படியும் ஒரு சர் வக்ஞன் இருப்பானோ? நல்ல வேடிக்கை. ஐயா பிராம ணர்களே! நன்றாய் சிந்தித்துப் பாருங்கள்! இம் மும் மூர்த்திகளின் திருவிளையாடல்களை இன்னும் சொல்லுகி றேன் கேளுங்கள்.

ஒருநாள் விஷ்ணு பிரம்மாவைப் பார்த்து, நான் உன் னைக்காட்டிலும் பெரியவன் என்று கூற பிரம்மா விஷ்ணு வைப்பார்த்து, நானே உன்னைக்காட்டிலும் பெரியவன் என்று கூற, இருவருக்கும் சண்டையுண்டாகி கடைசியாக ஈஸ்வரனிடத்தில் சென்று பஞ்சாயத்துக் கேட்க ஈஸ்வரன் இருவரையும் பார்த்து 'விஷ்ணு என் பாதத்தைப் பார்த்து

வரவேண்டியது; பிரம்மா என் சிரசைப்பார்த்து வரவேண்டியது. இவ்வாறு பார்த்துவிட்டு யார் முன்வருகின்றார்களோ அவரே பெரியவர்' என்று பிரம்மாவையும் விஷ்ணுவையும் ஓட்டப்பந்தயம் விட, விஷ்ணு பாதத்தை தேடிக்கொண்டுபோக, பிரம்மா சிரசைத் தேடிக்கொண்டு சென்றனர். இவ்வாறு இவர்கள் போகப்போக அவர்களிருவர்களும் சிரசும் பாதமும் கண்டுபிடிக்கமுடியாமல் அயர்ந்தார்கள்.

பிரம்மாவானவன் வெறுப் புற்று வருத்தத்தோடு போகும்போது ஈஸ்வரன் சிரசிலிருந்து தாழம்பூவிழ, அதை பிரம்மா பார்த்து 'நீ எங்கேயிருந்து வருகின்றாய்' யென்று கேட்க, அது நான் ஈஸ்வரன், தலையிலிருந்து வருகிறேன். என்றது. அதற்கு பிரம்மா 'ஈஸ்வரன் சிரசு இன்னும் எவ்வளவுதூரமிருக்கின்றது' என்றான். அதற்கு அந்தப் பூ ஓ! அது இன்னும் வெகுதூரம் இருக்கிறது. அதைப்போய் காண உன்னால் முடியாது' என்றது. பிரம்மாவானவன் திடுக்கிட்டு, ஓ! தாழம்பூவே! நான் ஈஸ்வரனிடத்தில் சென்று சிரசைப் பார்த்துவிட்டதாக சொல்லுவேன். அதற்கு நீ சாட்சியாக ஆமாம் என்று கூறவேண்டும்' என்றனன். அப்பூவும் அவ்வாறேசொல்லுவதாய்ஒத்துக்கொள்ளபிரம்மா அதை எடுத்துக்கொண்டு திரும்பி ஈஸ்வரனிடம் வந்து, தான்சிரசைப்பார்த்ததாகவும் அதற்குத் தாழம்பூவே சாட்சி யென்றுங் கூற, ஈஸ்வரனும் தாழம்பூவை விசாரித்தான். அந்தப்பூவும் 'பிரம்மா சிரசண்டை வந்தார், நான் பார்த்தேன், நாங்களிருவரும் அங்கிருந்துதான் வருகின்றோம்' மென்று சாட்சியங் கூறிற்று. இதைக்கேட்டு ஈஸ்வரன் விஷ்ணுவின் வரவை எதிர்பார்த்திருந்தான். அப்பொழுது விஷ்ணுவானவர் ஈஸ்வரனின் முழங்கால்வரை போய்அயர்ந்துமேல் கொண்டு செல்லமுடியாமல் அயர்ந்திருக்கும் பொழுது நாரதன் வந்து விஷ்ணுவின் விருத்தாந்தத்தை விசாரித்

தான். விஷ்ணு தான் ஈஸ்வரன் பாதத்தைத் தேடிச்செல்வதைக் கூறக்கேட்டு நாரதன் 'அது உன்னால் முடியாது. இன்னும் கணக்கில்லா தூரம் இருக்கின்றது. ஆகையால் நீ திரும்பிவிடு, என்று கூற விஷ்ணுவும் திரும்பிவிட்டான். உடனே விஷ்ணு வருத்தத்தோடு ஈஸ்வரனிடஞ் சென்று முழங்கால்வரை சென்றும் பாதத்தைக்காண முடியவில்லை. என்று வணக்கமாய்க் கூறி நிற்க; ஈஸ்வரன் சந்தோஷித்து நீயே பிரம்மாவைக்காட்டிலும் உயர்ந்தவன், பிரம்மா சோம்பேரியும் பொய்யனுமானான்' என்று கூறிவிட்டுத் தாழம்பூவைப் பார்த்து 'ஹே! தாழம்பூவே! என் சிரசில் இருந்து கொண்டே என் எதிரிலேயே பிரம்மாவுக்குப்பொய்சாட்சியும் கூறினையல்லவா ஆகையால் நீ என் பூஜைக்கு உதவாது போகக்கடவாய்என்றுவெறுத்துத்தள்ளினார். அதுமுதல்தான் தாலம்பூ ஈஸ்வரனுக்கு உதவாது போயிற்று.

"ஐயா! விப்பிரர்களே! இவ்வாறெல்லாம் உங்கள் மும்மூர்த்திகளின் யோக்கியதையையும் ஞானமின்மையையும் உங்கள் புராணங்கள் வெள்ளையாக வெளுக்கின்றதா அல்லவா?" என்றான். பிராமணர்களில் சிலர் வாய்திறவாது மௌனமுற்றனர். சிலர், உண்மையாக இக்கோரக்கதைகள் ஏராளமாய் எங்கள் புராணத்தில் ஏட்டுக்கேடாய் எழுதப்பட்டுக்கிடக்கின்றன' வென்றார்கள். உடனே மனோவேகன் எழுந்து 'ஹே! விப்பிரர்களே! கடையிலா ஞானம், கடையிலா காட்சி, கடையிலா வீரியம், கடையிலா வின்பம், நாமமின்மை, கோத்திர மின்மை, ஆயுள் இன்மை, அந்தராயங்களின்மை முதலாகிய எண் குணங்களமைந்து விருப்புவெறுப்பற்று உள்ள ஒரு பரம்பொருளையே உலகுக்கு இறைவனென்று கூறவேண்டும். இத்தகைய குணத்தையுடையவர்க்கே சர்வக்ஞன் என்று பெயர். இத்தகைய குணமுடைய ஒரு பொருளைத்தான் ஜினனென்றும், கடவுளென்றும் கூறலாம்.

இக்குணங்களில்லாமல் முன்னே கூறிவந்த ஆபாசக்கதைகளைக் கட்டி அவர்களுக்கு பிரம்மா விஷ்ணு சிவன் என்று பெயர் வைத்து அவர்களை கடவுளர் என்று சொல்லி அப்படிப்பட்ட "கடவுள் நம்மைக் காக்கின்றார், அழிக்கின்றார், படைக்கின்றார். அவரை வணங்காவிட்டால் உங்கள் பேரில் கோபங்கொள்வார். மாறுவேடம்பூண்டு வந்து கொல்லுவார். அவருக்குப் பெண்டாட்டி பிள்ளைகள் கூத்திகளுண்டு. அவர் அடிக்கடி பிறக்கின்றார்" என்று பயமுறுத்தி கடவுள் பேரால் பலர் பிழைப்புக்கு வழி தேடிக்கொண்டு மனிதர்களை மிருகங்களாக்கும் புராணங்களை விட்டுத்தொலையுங்கள்.

இதுவரை மாறுவேடம் பூண்டு புராண ஆபாசங்களை வெளியிட்டவர்கள் நாங்களே! இன்னும் மிகுந்திருக்கும் ஆபாசங்களைக் கணக்கிடவும் முடியாது. ஆகையால் பிராமணர்களும் இனி இம்மாதிரி மனிதர்களைக் கடவுள் பேரால் ...ரட்டிப் பிழைக்கும் கொடிய வழக்கத்தை விடவேண்டும். ...பாது ஜனங்களும் இப்பார்ப்பனர்கள் கூறிவரும் புராணங்க...ல்லாம் கட்டுக்கதைகளென்று தெரிந்து அவைகளைத் ...ரி நன்மார்க்கத்தில் ஒழுகவேண்டும். நாங்களும் இக்கதை...ளைப் பலவிடங்களிலும் பிரசுரித்து ஜனங்களைக் கடவுள் ...த்தினின்றும் நீக்கி நல்லொழுக்கத்தில் ஈடுபட்டு ஆத்ம...தி அடையும் புனித வழியைப் போதித்து வருகின்றோம். ...ரலீபுரத்திலுள்ள யாவரும் நற்சாட்சி, நன்ஞான, நல்லொ...ழுக்கமாகிய மும்மணிகளைக் கடைபிடித்து நடப்பீர்களாக, என்று கூறிமுடித்தான். உடனே அங்குள்ள பொது ஜனங்களும் பிராமணர்களில் பலரும் ஒன்றுகூடி அவ்விரு இளைஞர்களுக்கும் பூமாலை போட்டு சிம்மாதனத்தில் உட்கார வைத்து ஜெயபேரிகை கொட்டி ஜயப்பட்டமளித்து சந்தோஷங்கொண்டாடினார்கள்"

(முற்றிற்று.)

# நமது நோக்கம்.

மக்கள், மூடநம்பிக்கையிலிருந்து விடுபட வேண்டுமானால், மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்க வேண்டுமானால், இவற்றிற்கு விரோதமாகவுள்ள— கடவுளாலும், கடவுளைக்கண்டவராலும் சொல்லப் பெற்றவை என்னும் வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாயம், இவைகளிலிருந்து தோன்றிய ஜாதி வித்தியாசம், தீண்டாமை, பெண்பால் அடிமை, கடவுள் பெயரைச் சொல்லிப் பணம் பறிக்க ஏற்பட்ட பார்ப்பனக் கோட்டைகளாகிய கோயில்கள், பார்ப்பன ஆதிக்கமும், செல்வாக்கும் குறையாதிருக்க ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட மதங்கள், இருப்பார்க்குப் புண்ணியம் சம்பாதித்துக் கொடுப்பதாயும், இறந்தார்க்கு மோட்சத்திற்கு நேர்வழி காட்டுவதாயும் ஏய்த்து, வயிர் வளர்க்க கையாளப் பெறும் புரோகிதம், முதலியவைகளின் ஆபாசங்களை மக்கள் உணரவேண்டும். உணர்வார்களானால் அஞ்ஞானத்திலிருந்து விடுபட்டு, மூடநம்பிக்கையிலிருந்தும, மூடப்பழக்க வழக்கங்களிலிருந்தும் வெளியாகி தாங்களாகவே கரையேறுவார்கள்.

இவ்வுணர்ச்சியை மக்கட்கு உண்டாக்கும் பொருட்டே மூடி மூடி வைக்கப்பட்டு கடவுள் வாக்கெனப்படும் நூல்களின் ஆபாசங்களை நன்கு ஆராய்ந்த நுண்ணறிவாளர்களது துணைக்கொண்டு பல அறிவு விளக்க நூற்களாக குறைந்த விலைக்கு வெளியிடக்கருதி—"குடிஅரசு பதிப்பகம்" என்னும் பெயரால் ஒரு வெளியீட்டுக் கழகம் நிறுவியுள்ளோம்.

இதில் பல ஆராய்ச்சி நூற்களையும் வரிசையாக அச்சிட்டு மிகக்குறைந்த விலைக்கே வெளியிட ஏற்பாடு செய்திருக்கிறோம். அவற்றில் ஒன்றாவது வெளியீடாக இப்புத்தகப் பதிப்பிக்கப் பட்டது இதன் முதற்பதிப்பு 2000 புத்தகங்கள் செலவாகி விட்டதால் இப்போது இரண்டாவது பதிப்பாக பிரசுரிக்கப்பட்டது. அன்பர்கள் யாவரும் அவைகளை பொறுமையோடு வாசித்து சிந்தித்துப் பயனடைய வேண்டுகிறோம்.

மானேஜர்.

குடி அரசு பதிப்பகம் ஈரோடு.

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| 2. | லெனினும், மதமும் | 0 | 4 | 0 |
| 3. | பொதுவுடமைத் தத்துவங்கள் | 0 | 3 | 0 |
| 4. | கடவுளும், பிரபஞ்சமும் | 0 | 4 | 0 |
| 5. | கைவல்யம் அல்லது கலைக்கியானம் | 0 | 8 | 0 |
| | (இது சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது) | | | |
| 6. | இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம் | 0 | 4 | 0 |
| 7. | ,, அயோத்தியாகாண்டம் | 0 | 8 | 0 |
| 8. | ஞானசூரியன் | 0 | 4 | 0 |
| 9. | தர்ம பரிசை அல்லது புராண ஆபாசம் | 0 | 3 | 0 |
| 10. | மீமேயோ கூற்று மெய்யா பொய்யா? | 0 | 3 | 0 |
| 11. | பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை | 0 | 4 | 0 |
| 12. | ஈ.வெ.ரா. சீர்திருத்தமகாநாட்டு உபன்யாசம் | 0 | 2 | 0 |
| 13. | அகத்தியர் ஆராய்ச்சி | 0 | 2 | 0 |
| 14. | இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு | 0 | 2 | 0 |
| 15. | சுயமரியாதைப்பாடல் | 0 | 2 | 0 |
| 16. | கதர் மூட நம்பிக்கை (இங்கிலீஷ்) | 0 | 2 | 0 |
| 17. | சுயமரியாதைத் தாலாட்டு | 0 | 2 | 0 |
| 18. | பர்னார்ட்ஷா உபந்யாசம் | 0 | 1 | 0 |
| 19. | சோஷியலிசம் | 0 | 2 | 0 |
| 20. | போல்ஷ்விக் முறை | 0 | 1 | 0 |
| 21. | ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம் | 0 | 0 | 6 |
| 22. | கத்தோலிக்கர் வீண் கூச்சல் | 0 | 0 | 6 |
| 23. | சமதர்ம உபந்யாசம் | 0 | 0 | 6 |
| 24. | சோதிடப்புரட்டு | 0 | 2 | 0 |

விலாசம்:— மனேஜர்,

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

# பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக வெளியீடுகள்.

---

| | | | |
|---|---|---|---|
| 1. | பெண் ஏன் அடிமையானாள்? | 0 | 5 |
| 2. | முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை | 0 | 5 |
| 3. | கடவுள். | 0 | 5 |
| 4. | மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன? | 0 | [illegible] |
| 5. | பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும் | [illegible] | 3 |
| 6. | பிரகிருதிவாதம் | 0 | [illegible] |
| 7. | மதமும் விஞ்ஞான சாஸ்திரமும் | 0 | [illegible] |
| 8. | பிரபஞ்ச உற்பத்தி | 0 | [illegible] |
| 9. | நான் ஏன் கிறிஸ்தவனல்ல? | 0 | [illegible] |
| 10. | நான் சம்சயவாதி ஆனதேன் | 0 | 3 |
| 11. | மதம் என்றால் என்ன? | 0 | [illegible] |

விலாசம்:— மானேஜர்,

குடி அரசு பதிப்பகம் ஈரோ[illegible]